Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி–13 | 27–06–2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை –130

படச்சுருள்கள் அனைத்தையும் கனினி
தொழில் நுட்பத்தில் ஒருமணி
நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கனினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்
படம் பிறேம்செய்தல்,
அனைத்திற்கும் பொற்காலம்
வண்ணக்கலையகம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.
R.V
பந்தல் சேவை,
தர்மபுரம்.
(சி-9813)


## இராணுவ வாகனம் மோதியது

(தென்மராட்சி)

சரசாலை கனகம்புளியடிச் சந்தியிலிருந்து சாவகச்சேரி நோக்கி சென்று கொண்டிருந்த கார்மீது இராணுவ ஜீப் மோதியதில் காரின் பின்பக்கம் முழுவதுமாய் சேதமடைந்துள்ளது. இச்சம்பவத்தைத் தொடர்ந்து இராணுவ ஜீப்பை எடுத்துக் கொண்டு சென்ற இராணுவத்தினர் மீண்டும் இருபது நிமிடம் தாமதித்து சம்பவ இடத்திற்கு வந்து வருத்தம் தெரிவித்துள்ளனர். இச்சம்பவத்தால் காரின் பின்பகுதி சிந்தவடைந்துள்ளது. (28)

# சமாதான சூழ் நிலையை அரசாங்கம் தனது படை பலத்தைப் பெருக்கப் பயன்படுத்துகிறது

## அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் தங்கன் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசாங்கம் தற்போதைய யுத்த நிறுத்த சூழ்நிலையை சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு சாதகமான வழியாகப் பயன்படுத்தாமல் தனது படை பலத்தைப் பெருக்கி போர் ஆயத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிறது.

இவ்வாறு நேற்று முற்பகல் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்ற யாழ்மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சங்கம நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்துள்ளார். யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் சூ.சிறில் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் யாழ்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாக். பிரதமர் பதவி விலகல்

பாகிஸ்தான் பிரதமர் ஸபருல்லா கான் ஜமாலி நேற்று பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

ஆளும்கட்சியான பாகிஸ்தான் முஸ்லிம் லீக்கின் கூட்டம் ஒன்றில் சனாதிபதி முஷாரப்பிடம் அவரது இராஜினாமாக் கடிதத்தை சமர்ப்பித்துள்ளதாகத் தெரியவருகிறது. ஆனால் பதவி விலகுவதன் காரணத்தை அவர் கூறவில்லை. முஷாரப்பின் கொள்கைகளை ஜமாலி முழுமையாக ஆதரிக்கத்தவறியதாக குற்றம் சாட்டப்பட்டதைத்

(12ஆம்பக்கம் பார்க்க)

## கருணா தப்பியோடிய விவகாரம்

# புலிகளின் பொறுமையும், இராஜதந்திரமும்

# பிரதான கட்சிகளைச் சங்கடத்தில் மாட்டியது

## சிரேஷ்ட அரசியல்வாதி தெரிவிப்பு

(கொழும்பு)

**கருணாவிற்கு அலிசாஹிர் மௌலானா உதவியது தெரிந்திருந்தும் புலிகள் இதுவரை அந்த விடயத்தில் காட்டிய பொறுமையும், இராஜதந்திரமும் கொழும்பில் இரண்டு கட்சிகளையும் பெரும் சங்கடத்தில் மாட்டி விட்டுள்ளது என கொழும்பிலுள்ள சிரேஷ்ட அரசியல்வாதி ஒருவர் தெரிவித்தார் என இணையத்தளச் செய்தி ஒன்று கூறுகிறது.**

அலிசாஹிர் மௌலானா கருணாவிற்கு உதவியதை உடனடியாகவே அறிந்திருந்த போதும் அவ்வேளையில் அது வெளிப்படுத்தப்பட்டிருக்குமானால் இது ஒரு குற்றச்சாட்டாகக் கொள்ளப்பட்டு புலிகள் சமாதானத்தைக் குழப்புவதற்கான நடவடிக்கையாகவே பார்க்கப்பட்டு புலிகள் மீது குற்றச்சாட்டுத் திருப்பி விடப்பட்டிருக்கும்..

ஆனால், விடுதலைப்புலிகள் பொறுமைகாத்து கருணாவுடன் சென்றவர்கள் திரும்பிவந்து உண்மையை வெளிப்படுத்தும் வரையில் காத்திருந்தமை இக்குற்றச்சாட்டில் சம்பந்தப்பட்டவர்களை நிராகரிக்க முடியாது செய்துள்ளதோடு, இரண்டு பிரதான கட்சிகளின் இனப்பிரச்சினை தொடர்பான அணுகுமுறையையும் அம்பலத்திற்குக் கொண்டுவந்துள்ளனர் எனவும் அவ் அரசியல்வாதி தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில் விடுதலைப்புலிகள் இராஜதந்திர நடவடிக்கைகளில் காட்டிவரும் மதிநுட்பமும், அரசியல் ரீதியில் காட்டும் உறுதிப்பாடும் ஆச்சரியம் அளிக்கும் வகையில் உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

# இறுதித்தீர்வுக்கு முன் இ.த.அதிகாரசபை; புலிகளின் நிலைப்பாட்டில் தவறில்லை

## அமெரிக்கத்தூதுவர் தெரிவிப்பு

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு குறித்துப் பேசுவதற்கு முன்னர் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்து முதலில் பேசவேண்டுமென்ற விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டில் தவறுகள் ஏதுமில்லையென இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார். கொழும்பு பத்திரிகைகளின் ஆசிரியர்களுடனான சந்திப்பு ஒன்றின் போதே அமெரிக்கத் தூதுவர் ஜெவ்ரி லண்ஸ்டன்ட் இதனைக் கூறியுள்ளார். விடுதலைப் புலிகளின் இந்த நிலைப்பாட்டினால் இலங்கையின் சமாதான முயற்சிகள் தடைப்பட்டுள்ளதாகப் பத்திரிகையின் ஆசிரியர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமெரிக்கத் தூதுவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இலங்கையின் இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வொன்று ஏற்படுவதற்கு முன்னர், இடைக்காலத் தீர்வொன்று அவசிய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரச அச்சகத்தில் தீவிபத்து தேர்தலுக்குப்பாதிப்பில்லை

(கொழும்பு)

கொழும்பு பொரல்லையில் அமைந்துள்ள அரசாங்க அச்சகத்தில் நேற்று மாலை தீ விபத்து ஏற்பட்டது. தீ விபத்துக்கான காரணம் எதுவும் இதுவரை வெளியாகவில்லை. அச்சகத்தின் பொறியியல் பகுதியிலேயே தீ விபத்து ஏற்பட்டுள்ளது. எனினும் அருகில் இருந்த கடதாசிப்பகுதிக்கு அது பரவவில்லை. அதனால் பாரிய சேதம் தடுக்கப்பட்டுள்ளது. தீ நேற்று இரவு அளவில் கட்டுபபாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

(12ஆம்பக்கம் பார்க்க)

## தமிழீழ காவல்துறை உறுப்பினர் திருமலை மகிந்தபுர சாவழியில் கைது

திருகோணமலை மகிந்தபுர சோதனைச் சாவடியில் தமிழீழ காவல்துறை உறுப்பினர் ஒருவரை படையினர் நேற்றுக்கைது செய்துள்ளனர்.இவர் மூதூரில் இருந்து வெருகல் நோக்கி லொறி ஒன்றில் சென்றவேளை தொடர்பாடற் கருவியை வைத்திருந்தார் எனக் கூறியே கைதுசெய்துள்ளனர் இது சம்பந்தமாக போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(32)

## வவு.வளாக மாணவர் போராட்டம் நேற்று முடிவுக்கு வந்தது

(செட்டிகுளம்)

யாழ். பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாக மாணவர்களின் பிரச்சினை நேற்று முற்பகலுடன் முடிவுக்கு வந்துள்ளது. நேற்று முன்தினம் மாலை முதல் எந்த ஒரு தீர்வுமின்றி இழுபட்ட பேச்சு வார்த்தைகள் வவுனியா அரச அதிபர் கே.கணேஷ், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் ஆகியோரின் சமரச முயற்சியின் பின் முடிவுக்கு வந்துள்ளது. மாணவர்களும் நிர்வாகத்தினரும் சுமுகமான நிலைக்கு வந்தனர். இதன்படி 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர்

(12ஆம்பக்கம் பார்க்க)

கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம்
விழிப்புடன் இருப்போம் விபத்தினைத் தடுப்போம்
யுனிசெவ் வெண்புறா – வன்னி
(சி-9728)

## வரிவிளம்பரம்

**வெளிவந்து விட்டது**

வெளிவந்துவிட்டது. A/L Physics, Volume-02 (Mechanis) ஆசிரியர்: திரு.எஸ். தவபாலன். எல்லாப்புத்தகசாலையிலும்பெற்றுக் கொள்ளலாம். (4748)

**வகுப்பு ஆரம்பம்**

கேம்பிறிஜ் கல்லூரி, உதயநகர், கிளிநொச்சி. பௌதிகவியல். 2005,2006 A/L, வெள்ளி,சனி. ஆசிரியர்: திரு.எஸ்.தவபாலன். (4748)

**இடமாற்றம்**

யாழ். சாலை கிளிநொச்சி என்னும் முகவரியில் இயங்கி வந்த கோமான் தையலகம் 25-06-2004 ஆம் (வெள்ளிக்கிழமை) திகதி தொடக்கம் கச்சேரி வீதி கிளிநொச்சி (தமிழீழ வைப்பகம் பின்புறமாக) என்னும் முகவரியில் புதிய கட்டடத்தில் இயங்குகின்றது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்(4744)

**சித்திரைப் புத்தாண்டுப் பலன்கள் எப்படி**

எங்கும் விற்பனையாகிறது.15/= எல்லா ராசிப்பலன்களும் அடங்கியது.கணிப்பாசிரியர்:-PROF. சத்தியதாஸன் 3ஆம்மைல் ஆனைக்கோட்டை(T.P-021.2222754) கிடைக்குமிடம்:-(1) ருக்மணி புத்தகசாலை, புதுக்குடியிருப்பு.(2) மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (4754)

**தவறிவிட்டது**

நறுவிலடி புலோலி தெற்கைச் சேர்ந்த வைரமுத்து சரவணபவானென்பவருடைய தே.அ.அட்டை 483170203V, சாரதி அனுமதிப்பத்திரம், வேறு ஆவணங்களுடன் 25.06.2004ஆம் திகதி கரடிப்போக்குச் சந்தியிலிருந்து பரவிப்பாஞ்சான் போகும்வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். தகவல் வை.சரவணபவான். (4752)

# கேள்வி கோரும் அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்ட செயலக திணைக்களக் கேள்விச் சபையின் தலைவரால் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடம் இருந்தும், இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் உறுப்பினர்களிடம் இருந்தும் கீழ்வரும் அட்டவணைப் பிரகாரம் உள்ள வேலைகட்கான கேள்வி கோரப்படுகின்றது.

1. ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை 05.07.2004 தொடக்கம் 12-07.2004 வரை மாவட்ட செயலகம், கிளிநொச்சியில் இலவசமாகப் பார்வையிடுவதோடு, மேலதிக விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
2. அரசாங்க அதிபர், கிளிநொச்சி என்ற பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு பின்வரும் முகவரிக்கு 19.07.2004ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**கேள்விச்சபை,**
**மாவட்ட செயலகம், கிளிநொச்சி.**

அதேதினம் பி.ப.3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர்கள் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட நாளில் அலுவலகம் முடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலைநாளன்று அதே இடத்தில் அதே நேரத்தில் கேள்விகள் திறக்கப்படும்.

| கேள்விக்குறியீட்டு இல. | வேலைவிபரம் | கேள்விப்பிணை | கேள்வி ஆவணங்களின் பெறுமதி | வேலைநிறைவேற்ற வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| KN\DPS\UNICEF\MW\01 | பிரசவ விடுதி அமைத்தல், சுற்றயல் கூறு மருத்துவமனை பூநகரி | 266000\- | 1000\- | 06 மாதங்கள் |
| KN\DPS\UNICEF\MW\02 | பிரசவ விடுதி புனரமைத்தல், மத்தியமருந்தகம் வேரவில் | 62500\- | 1000\- | 04 மாதங்கள் |
| KN\DPS\UNICEF\MW\03 | பிரசவ விடுதி புனரமைத்தல், தர்மபுரம் மத்திய மருந்தகம் | 30000\- | 1000\- | 04 மாதங்கள் |
| KN\DPS\UNICEF\MW\04 | பிரசவ விடுதி புனரமைத்தல், மத்திய மருந்தகம் உருத்திரபுரம் | 96500\- | 1000\- | 04 மாதங்கள் |
| KN\DPS\UNICEF\MW\05 | பிரசவ விடுதி புனரமைத்தல், வட்டக்கச்சி மத்திய மருந்தகம். | 26500\- | 1000\- | 04 மாதங்கள் |
| KN\DPS\UNICEF\MW\06 | சிறுவர் விடுதி புனரமைத்தல் சுற்றயல்கூறு மருத்துவமனை-பளை | 66500\- | 1000\- | 04 மாதங்கள் |

இதற்கான விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்கள் யாவும் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அலுவலக நேரத்தில் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**தி.இராசநாயகம்,**
தலைவர்,
கிளிமாவட்ட செயலக கேள்விச் சபை,
அரச அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-9743)


# ஆனி மாதக் கலைவிருந்து

(முல்லைத்தீவு)

முல்லை. மாவட்ட நுண்கலைக் கல்லூரியின் ஆனி மாதக் கலை விருந்து புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரி மண்டபத்தில் வரும் 30-ஆம திகதி புதன் கிழமை மாலை 4.00 மணிக்கு இடம் பெற இருக்கின்றது.

இந் நிகழ்வில் நுண்கலைக் கல்லூரி மாணவர்கள் வழங்கும் தாளவாத்தியக் கச்சேரி, சிறப்புத் தமிழிசை விருந்து என்பன இடம்பெற விருப்பதால் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு நுண்கலைக் கல்லூரியினர் வேணர்டுகின்றனர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 02 - 03 - 1955 | 26 - 05 - 2004 |

## அமரர் வை. வீரபத்திரபிள்ளை (வீரா)

பாசத்தில் தந்தையாய்
துன்பத்தில் சகோதரனாய்
அனைத்திலும் நண்பனாய்
நின்ற எம் வீரா...

அன்பு மனைவி
ஆருயிர் பிள்ளைகள்
இனிய உறவுகள் - தவித்திருக்க
சென்றதெங்கே சொல்வீரா

எத்தனை யுகம் மறைந்திடினும்
உம் நினைவை நாம் மறவோம்.

வட்டக்கச்சி,
கிளிநொச்சி. (4618) **நண்பர்கள்.**

## நயினாதீவு ஸ்ரீநாகபூசணி



# அமுதசுரபி அன்னதான சபை

**ஆரம்பம் - 1960 (வரைவுள்ளது) -2004 -2004**

நயினாதீவு அருள் மிகு ஸ்ரீ நாகபூசணி அம்பாளின் திருவருளினால் 1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பெற்ற நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அமுதசுரபி அன்னதான சபை "அமுதசுரபி" என்னும் பெயர் தாங்கிய மணி மண்டபத்தின் கண்ணே ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கு சிறந்த முறையில் அன்னதான தொண்டினைச் செய்து வருகின்றது. இவ்வாண்டுடன் 45 ஆவது ஆண்டில் பிரவேசிக்கின்றோம்.

அம்பாளின் திருப்பதியிலேயே நடைபெறும் இத்தொண்டு சிறந்தசேவையெனக் கருதி தருமசீலர்களாகிய வர்த்தகப்பெருமக்கள், விவசாயப்பெருமக்கள், தொழிலாளப் பெருமக்கள் மற்றும் அம்பிகை அடியார்கள், அன்பர்கள் அனைவரும் மனமுவந்து பணம், பொருள் உதவிசெய்து வருவதுடன் ஆக்கமும், ஊக்கமும் தந்து அன்னதான சபையின் சேவையைப் பாராட்டியும் வருகின்றனர்.

அம்பாளின் திருவருளால் பணிக்கப்பெற்ற இச்சேவையை சிறந்த முறையில் செய்து அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற சபை நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும், நற்சேவைத் தொண்டர்களுக்கும், அமுத சுரபி மண்டபத்திற்கு வந்து பணிசெய்யும் அடியார்களும், தத்தம் கடமைகளைத் திறமையாகச் செய்த, செய்கின்ற சேவையாளர்களுக்கும் அன்னதானத் தொண்டினை நேரடியாகக் கண்டும் கேட்டும் ஆசியுரை வழங்கிய அன்பர்களுக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டாண்டு தோறும் அன்னதானம் சிறப்பாக நடைபெற பணம், பொருள் முதலியவற்றை மனமுவந்து உதவி வரும் தர்மசீலர்களுக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீநாகபூசணி அம்பாளின் திருவருள் கிடைக்கும் வண்ணம் பிரார்த்தித்துச் சபையின் மனமுவந்த, பணிவார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்வாண்டு ஆனிமாதம் நாலாம் நாள் (18.06.2004) வெள்ளிக்கிழமை அம்பாளின் மகோற்சவம் (திருவிழா) ஆரம்பமாகி ஆனி மாதம் 17 ஆம் நாள் (1.07.2004) வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், ஆனி மாதம் 18 ஆம்நாள் (02.07.2004) வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவிருப்பதால் அம்பாளை தரிசிக்க வரும் அடியார்களுக்கு சிறந்தமுறையில் 16 நாட்களும் அன்னதானம் வழங்க சபை தீர்மானம் செய்துள்ளது. ஆகவே தர்மசீலர்களாகிய உங்களிடம் அன்னதான சபையால் நியமிக்கப்பெற்ற உத்தம தொண்டர்கள் வருவார்கள், அவர்களிடம் வழமைபோல் நீங்கள் உதவும் பணம், பொருள் முதலியவற்றைக் கொடுத்து சபையின் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளும் படி கேட்டுக்கொள்கின்றோம்.

அடியார்களின் அல்லல் தீர்க்கத் தேருந்து வரும் அன்னை நாக பூசணி, நாட்டில் சாந்தியும் சமாதானமும் ஏற்பட்டு சகல மக்களும் இன்புற்று வாழ அருள் புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-10106) நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அமுத சுரபிஅன்னதான சபையினர்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# தன் மீதான தடைகளைக் களைந்தால் அணுவாயுத திட்டத்தைக் கைவிடத்தயார்

## -வடகொரியா அறிவிப்பு

**அணுவாயுத திட்டத்தைக் கைவிடத்தயார் ஆனால் அதற்குச்சரியான விலை தரப்பட வேண்டும். இவ்வாறு பெய்ஜிங்கில் ஆறுநாடுகள் பங்கு கொண்ட மூன்றுநாள் பேச்சுவார்த்தைகளின் பின்னர் வெளியிட்ட அறிக்கையில் வடகொரியா கேட்டுள்ளது.**

இந்த அறிவிப்பு தனது அணு வாயுதங்களைக் களைவதற்கான ஒரு நடவடிக்கை என்றும் கூறியுள்ளது.

ஆனால் இதற்கு கைமாறாக தன்மீதான பொருளாதாரத் தடைகளை களையவேண்டும்; பயங்கரவாத பட்டியலில் இருந்து தனது பெயரை அமெரிக்கா நீக்க வேண்டும்.

இவ்வாறு வடகொரியா கோரிக்கை விடுத்திருக்கின்றது. சரியான சூழல் தோற்றுவிக்கப்படுமானால் வடகொரியா அணுவாயுதத் திட்டத்தை முடக்கி வைப்பதோடு அணுவாயுதங்களை களையவும் செய்யும் என்று பீஜிங்கில் வடகொரியா தூதரக அதிகாரி கூறியுள்ளார்.

இதேவேளை மேற்படி பேச்சுவார்த்தை குறித்து பேச்சுவார்த்தைக்கு தலைமை தாங்கிய சீன அதிகாரி ரூவான்சீங் தெரிவிக்கையில்,

இரண்டாவது சுற்றுப் பேச்சும பேச்சுவார்த்தைகளின் போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் புதன்கிழமை கலந்துரையாடல் ஆரம்பித்தன எனவும் வடகொரியா, அணுகூடிய பிரதேசமாக ஆக்கப்படவேண்டும் என்பதற்கு பூரண ஆதரவு தெரிவிக்கப்பட்டதாகவும் இயன்றளவில் விரைவில் இந்த விடயம் சம்பந்தமாக முதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாலாவது சுற்றுப்பேச்சுவார்த்தைகள் செப்ரம்பர் மாத இறுதியில் நடைபெறும் என்று கூறிய அவர் அதற்கான திகதி இராஜதந்திர ரீதியில் தீர்மானிக்கப்படும் என்று மேலும் குறிப்பிட்டார்.



பிறஸ்லெஸ்சில் உள்ள நிமோ 33 சுழியோடல் மையத்தில் இரண்டு சுழியோடிகள் 33 மீற்றர் ஆழமான நீர்த்தேக்கத்தினுள் நீந்துகின்றனர். உலகில் மிக ஆழமான நீர்நிலைச் சுழியோடிகளைப் பயிற்றுவிப்பதற்காக விசேடமாக அமைக்கப்பட்ட நீர்த்தேக்கம் இதுவாகும்.

### அமெரிக்கா பாராட்டு

இருதரப்பு உறவுகளை மேம்படுத்தும் முகமாக இந்தியா-பாகிஸ்தான் எடுத்துள்ள நடவடிக்கைகளை அமெரிக்கா பாராட்டியுள்ளது. இரு நாடுகளினதும் தற்போதைய தலைவர்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள் நம்பிக்கையூட்டுகின்றது. அத்துடன் உறவுகளை இயல்பாக்கவும் பரஸ்பரம் பிரச்சினைகளைத் தீர்க்கவும் உதவிடும் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சக அதிகாரி அடல் எல்ரி கூறியுள்ளார்.



கெய்றோவில் ஈராக் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பின் ஒருவருட பூர்த்தியை பல நூற்றுக் கணக்கான எகிப்திய எதிர்ப் பார்ப்பாட்டக் காரரைச் சூழ்ந்திருக்கும் கலகமடக்கும் பொலிசார்.

# தீவிரவாதிகளின் தாக்குதலில் ஜம்மு-காஷ்மீரில் 12பேர் பலி

ஜம்மு-காஷ்மீரில் பூஞ்மாவட்ட கிராம தற்காப்பு உறுப்பினர்களைச் சேர்ந்த 10 பேர்உட்பட்ட 12 பேரை தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றுள்ளனர். இந்த சம்பவத்தில் 08 பேர் படுகாயமடைந்துள்ளனர்

நேற்று முன்தினம் இரவு கிராமதற்காப்பு உறுப்பினர்கள் கூடியிருந்த வீட்டினுள்புகுந்த தீவிரவாதிகள் சரமாரியாக சுட்டுள்ளனர் என்று அரச அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

சுட்டுக்கொல்லப்பட்டவர்களில் ஒரு பெண்ணும் குழந்தையும் அடங்குவர்.

# ஐரோப்பிய ஆணைக்குழுவின் புதிய தலைவராக போர்த்துக்கல் பிரதமரை நியமிக்க ஸ்பெயின் ஆதரவு

ஐரோப்பிய ஆணைக் குழுவின் புதிய தலைவராக போர்த்துக்கல் பிரதமர் யோர்சே மனுவன் யூராவோ நியமிக்கப்படுவதற்குத் தனது ஆதரவை வழங்கப் போவதாக ஸ்பெயின் கூறியுள்ளது.

ஐரோப்பிய ஆணைக்குழுத் தலைவர் பதவிக்கு போர்த்துக்கல் சார்பில் ஒருவர் வேட்பாளராக நியமிக்கப்பட்டால் அதற்கு ஸ்பெயின் இயல்பாகவே ஆதரவு வழங்கும் என்று அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார்.

இதேபோன்று தமது நாட்டவர் வேட்பாளராக நியமிக்கப்பட்டால் போர்த்துக்கல் ஆதரிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

போர்த்துக்கல்லுக்கும் ஸ்பெயினுக்கும இடையிலான உச்சி மாநாட்டுக்குரிய ஏற்பாடுகளை செய்யும் கூட்டத்தில் இரண்டு நாடுகளினதும் அமைச்சர்கள் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் மேற்படி விடயத்தை வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார்.

# ஈராக்கிய படைகளுக்கு நேட்டோ பயிற்சி வழங்க வேண்டும்-புஷ்

துருக்கியில் அடுத்த வாரம் கூடவுள்ள மாநாட்டின் போது ஈராக் படைகளுக்கு நேட்டோ பயிற்சி வழங்கவேண்டுமென்ற கோரிக்கையை அமெரிக்க சனாதிபதி புஷ் வலியுறுத்தியுள்ளார்.

ஈராக்கில் அமெரிக்காவிற்கு ஏற்பட்டுள்ள சுமைகளை ஏனைய நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள புஷ் விரும்புவதே இதற்கு காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

ஈராக்கில் சர்வதேச சமூகத்தின் பங்களிப்பை தனது 5 நாள் ஐரோப்பிய விஜயத்தின் போது கோருவார் எனத்தெரிவிக்கப்படுகின்றது.

ஈராக் படைகளுக்கு பயிற்சியும் உபகரணங்களும் வழங்கவேண்டுமென ஈராக் பிரதமர் அலாவி வேண்டுகோள் விடுத்துள்ளார் இதற்கு பதிலளிக்குமாறு புஷ் நேட்டோவை வற்புறுத்துவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் புஷ்ஷின் கோரிக்கைக்கு நேட்டோ பதிலளிப்பது கட்டாயம் என்கிறார் புஷ்ஷின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் கொண்டலிசாரைஸ்,



துருக்கியைச் சேர்ந்த எதிர்ப்பாளர்கள் நேட்டோவை எதிர்த்து அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ்புஷ், பிரித்தானிய பிரதமர் ரொனிபிளேயர் ஆகியோரின் படங்களை விரல்களில் தாங்கியவாறு ஸ்தான்புல் பள்ளிவாசலின் முன் தமது வெள்ளிக்கிழமைப் பிராத்தனையின் பின் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர்.



தென்ஸ்பெயின் பாரம்பரிய செயின்ற்யோன் நைற் நிகழ்வின்போது எரிக்கப்படும் கொடும்பாவியைப் பார்வையிடும் மக்கள்.

# ஜோர்தான் தீவிரவாதி சர்க்காரியைத் தேடி அமெரிக்க இராணுவம் தேடுதல் வேட்டை


ஜோர்தான் போராளி ஒருவரை கைது செய்யும் நடவடிக்கையை அமெரிக்க இராணுவம் தீவிரப்படுத்தியுள்ளது.

மிகவும் பயங்கரமான தாக்குதல்களை இவர் நடத்தியுள்ளதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

இவர் பாக்தாத்தில் உள்ள மறைவிடம் ஒன்றில் இருக்கக் கூடும் என்ற சந்தேகத்தையும் குறிப்பிட்ட மறைவிடம் உள்ள பகுதி மீது அமெரிக்க போர் விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலில் 20 முதல் 25 பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

பலூஜாவில் உள்ள மறைவிடம் ஒன்றில் இருந்தவாறே ஜோர்தானிய தீவிரவாதி அபு முசாக் சர்க்காரி பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக ஈராக்கில் உள்ள அமெரிக்கக் கூட்டுப்படையினர் தெரிவித்துள்ளனர்.



கொங் கோலஸ் கடற்கரைக்கு அண்மையாகவுள்ள படகுத் துறையை அவதானிக்கும் இராணுவவீரர்

# கிளர்ச்சியாளர்களை ஒடுக்குவதற்கு நேபாளத்திற்கு இரண்டு வேவு விமானம்

## -பிரிட்டிஷ் அரசு வழங்கியது

நேபாளத்தில் கிளர்ச்சியாளர்களை ஒடுக்குவதற்காக பிரிட்டிஷ் அரசு இரண்டு அதிநவீன வேவு விமானங்களை நேபாள அரசிற்கு வழங்கியுள்ளது. இவற்றில் ஒன்று காத்மண்டு போய்ச் சென்றுள்ளது மற்றைய வேவு விமானம் இம்மாத இறுதியில் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக பிரிட்டிஷ் அரசு கூறியுள்ளது. மவோயிஸ்ட் கிளர்ச்சியாளர்களை ஒடுக்குவதற்காகவே இந்த அதிநவீன வேவு விமானம் வழங்கப்பட்டுள்ளதாக பிரிட்டிஷ் அரசு கூறியிருக்கின்றது.

### கைதிகளைச்சந்திக்க ஏற்பாடு செய்ய வேண்டும்

வளைகுடாப்பகுதி, ஈராக், ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா பிடித்து வைத்துள்ள கைதிகளை உடனடியாக சந்திக்க ஏற்பாடு செய்யவேண்டும். இவ்வாறு 30இற்கும் மேற்பட்ட ஐ.நா.மனித உரிமைகள் நிபுணர்கள் கோரியுள்ளனர். இராணுவ நீதிமன்றங்களில் இக்கைதிகளுக்கு நியாயமான விசாரணைகள் நடத்தப்படாது என்றும ஐ.நா. சபையின் மனித உரிமை நிபுணர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனா.

## யாழ். குடாநாட்டு மக்களுக்கு

# இராணுவம் மற்றும் தேச விரோதிகளால் ஏற்பட்ட இழப்பு குறித்த விபரம் திரட்டல்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.குடாநாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளாலும் பேரினவாதிகளின் தூண்டுதலின் பேரில் தமிழ்த் தேச விரோதிகளால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளாலும் தமிழ்மக்கள் சந்தித்த இழப்புக்கள் குறித்த விரிவான அறிக்கை ஒன்று சர்வதேச மட்டத்தில் வெளியிடப்படவுள்ளது.**

1974ஆம் ஆண்டிலிருந்து இற்றை யாழ்.குடாநாட்டு மக்களால் எதிர்கொள்ளப்பட்ட இழப்புக்கள் குறித்து பூரண விபரங்களை உள்ளடக்கி வெளியிடப்படவுள்ள இவ் அறிக்கையினைத்தயாரிக்கும் நடவடிக்கைகளில் யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை ஈடுபட்டு வருகின்றது.

இதற்காக,

☐ சிறிலங்காப் படையினரால் கைது ...யப்பட்டு காணாமற் போனோ..., சிறைகளில் படுகொலை செய்யப்பட்டோர்.

☐ இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற் போனோர், சுட்டுக்கொல்லப்பட்டோர்.

☐ தேசவிரோத கும்பலினால் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமற் போனோர், படுகொலை செய்யப்பட்டோர்.

☐ இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் அங்கவீனரானோர், பொருளாதார இழப்புக்கள்.

☐ விமானப்படைக்குண்டு வீச்சுக்கள், எறிகணை வீச்சுக்கள், கடற் படுகொலைகளில் கொல்லப்பட்டோர், பாதிக்கப்பட்டோர்.

ஆகியன உட்பட கடந்த காலத்தில் இடம்பெற்ற இழப்புக்கள் தொடர்பாக விரிவான விபரங்களைச் சேகரிக்கும் பணியைநேற்று முதல் யாழ்.மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவை ஆரம்பித்துள்ளது. தற்போது வேலணைப் பிரதேசத்தில் இந்நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது. (33)

## சாரணர்களுக்கான வேலைவாரம்

முல்லை. வலயத்தில் உள்ள 46 பாடசாலைகளில் சாரணர்களுககான வேலைவாரம் ஆரம்பமாகியுள்ளது. கடந்த வியாழனன்று ஆரம்பமாகியுள்ள வேலைவாரம் 30ஆம் திகதிவரை பாடசாலைகள் மட்டத்தில் நடைபெறவுள்ளதாக உதவி ஆணையாளர் திரு.ஜெயம் சபாபதி தெரிவித்தார். (20)

## தலையின்றி யுவதியின் சடலம் பேசாலையில் கரை ஒதுங்கியது

(மன்னார்)

தலையில்லாத நிலையில் இளம் யுவதியின் சடலம் மன்னார் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சென்ற புதன் பேசாலைக்கு அருகே, நடுக்குடா கிராம கடற்கரைப் பகுதியில், அப்பிரதேச வாசிகளால் கண்டுபிடிக்கப்பட்ட இச்சடலம் மன்னார் நீதவானால் பார்வையிடப்பட்டது.

பிரேத பரிசோதனைக்காக சடலத்தை அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்புமாறு நீதவான் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார். (மி)

## மட்டக்களப்பில் வீடுகளுக்குள் நுழைந்து மக்களை மிரட்டும் சிறிலங்காப் படையினர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மண்டூர் பிரதேசத்தில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் பொது மக்களின் வீடுகளுக்குள் நுழைந்து மிரட்டுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கத்திகள், பொல்லுகளுடன் வரும் படையினர் வீட்டு உரிமையாளரின் பெயரைச்சொல்லிக் கூப்பிடுவதுடன் கதவிலும் தட்டுவதாகவும் இதனால் அப்பகுதி மக்கள் மாலையானால் மிகுந்த பயப்பீதியுடன் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கோட்ட மட்டத்திலான கிளித்தட்டுப் போட்டி

சிலாவத்தை தமிழ் வித்தியாலயத்தில் கோட்ட மட்டத்திலான கிளித்தட்டுப் போட்டி கடந்த புதனன்று நடைபெற்றது.

இதில் ஆண்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தை செம்மலை மகாவித்தியாலயமும், இரண்டாம் இடத்தை முள்ளியவளை தமிழ் வித்தியாலயமும், மூன்றாம் இடத்தை சிலாவத்தை தமிழ் வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன. தொடர்ந்து பெண்களுக்கான கிளித்தட்டுப் போட்டியும் நடைபெற்றது. (20)

## வீதிப் போக்குவரத்து ஒழுங்குமுறைகளை அமுல்படுத்துவது பற்றி ஆராய்வு

(வடமராட்சி)

யாழ். குடாநாட்டில் வீதிப் போக்குவரத்து ஒழுங்குமுறைகளை அமுல்படுத்துவது தொடர்பாக ஆராயும் கூட்டமொன்று நேற்று முன்தினம் யாழ்.நீதிமன்றில் இடம் பெற்றது.

மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸ் உயரதிகாரிகளுடன், யாழ்.மாநாகரசபை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இவர்களுடன் சிற்றூர்தி உரிமையாளர் சங்கம் மற்றும் முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டிருந்தனர்.

பிற்பகல் 2.45 இற்கு ஆரம்பமான கூட்டம் சுமார் 3 மணி நேரத்திற்கு மேலாக நீடித்தது.

குறிப்பாக, நகரில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமாறு நீதவான் பணிப்புரையினை விடுத்தார்.

அத்துடன், நகரப் பகுதிகளில் வீதிப் போக்குவரத்து சமிக்ஞைகள் மற்றும் அறிவிப்புப் பலகைகளை நாட்டுவதுடன் ஒரு வழிப்பாதையூடான போக்குவரத்து நடவடிக்கைகளை இறுக்கமாக்க வேண்டுமெனவும்அங்கு வலியுறுத்தப்பட்டிருந்தது.

அண்மைக்காலமாக குடாநாட்டில் வீதி விபத்துச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (27)

## கோட்டமட்ட தமிழ்த்தினப்போட்டி 29,30-இல் நடைபெற ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கல்வி வலையத்திலுள்ள பருத்தித்துறை கோட்ட பாடசாலைகளுக்கிடை யிலான கோட்டமட்ட தமிழ்த்தினப்போட்டி எதிர்வரும் 29,30 ஆம் திகதிகளில் பிற்பகல் 2.30 மணியளவில் பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. இதில் கவிதை, கட்டுரை மனனப்போட்டிகள் என்பன உட்பட்ட இயலிசை நாடகப்போட்டிகளும் இடம்பெறும். (33)



மல்லாவி மத்திய கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச கூட்டுறவாளர் தின விழாவில் துணுக்காய் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பேச்சு, கட்டுரை, சித்திரப் போட்டிகள் நடைபெற்றது. இதில் தமிழீழத் தேசியக் கொடியைத் துணுக்காய் நிர்வாக சேவை உத்தியோகத்தர் சு. இரத்தினம் ஏற்றி ஆரம்பித்து வைக்கிறார்.

(படம் : அன்ரனி)

## தொழில் சார்பயிற்சிக்குத் தயார்படுத்தும் பாலிநகர் கல்விவளநிலையம் திறப்பு

நோர்வே நாட்டின் அபிவிருத்தி நிதியத்தின் உதவியுடன் கிராமிய பொருளாதாரக்கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் நடைமுறைப் படுத்தும் ஒவ்வொரு இளைஞர், யுவதிகளையும் தொழில்சார் பயிற்சிககு தயார்ப்படுத்தலும் வலுப் படுத்தலும் என்னும் திட்டத்தின் முதற்படியாக கடந்த புதன்கிழமை பாலிநகர் வவுனிக்குளம் பகுதியில் மாணவர்களுக்கும் இளைஞர் யுவதிகளுக்கும் பயனுறுதி வாய்ந்த கல்விச் சேவை வள நிலையமானது காலை 10.30 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வின் மங்கல விளக்கினை மாணவி செல்வி. ச.விஸ்ணுகாவும் வலயக்கல்வித் திணைக்கள பிரதிக்கல்விப்பணிப்பாளர் சு.பரந்தாமன், தமிழீழ மாணவர் அமைப்பு நிர்வாகப்பொறுப்பாளர் பாரிமகன் ஆகியோர் ஏற்ற தேசியக் கொடியினை பாண்டியன் குளம் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் கண்ணமுதன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து பெயர்ப்பலகையைப் பாண்டியன்குளம் தமிழர் புனர்வாழ்வுக்கழக துணுக்காய் வலயப் பணிப்பாளர் மூர்த்தி பெயர்ப் பலகையை திரை நீக்கம் செய்தார். அதனைத்தொடர்ந்து வளநிலையத்தின் நாடாவினைப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் சு.பரந்தாமன் வெட்டித் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து வரவேற்புரையினை. அமுதா நிகழ்த்த, தலைமையுரையினை ரீடோ நிறுவனத்தின் தலைமைப் பணிமனை இணைப்பாளர் க.ஜெயசீலன் நிகழ்த்தினார். அவர் தனதுரையிலே இன்று இந்த கல்வி வளநிலையத்தின் சேவைகள் எமது இலக்கான பயனாளிகள் எவ் வாறு பயனடைய வேண்டும் என்பவை பற்றி விளக்கிக் கூறினார்.

இவரைத் தொடர்ந்து பிரதம விருந்தினர்கள், சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்த சு.பரந்தாமன் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த மூர்த்தி ஆகியோர் வழங்கினர்.

இந் நிகழ்வினை ரீடோ நிறுவனத்தின் ODW செயல் திட்டத்தின் பாடவிதான இணைப்பாளர் ந.நவாஸ் சங்கர் தொகுத்து வழங்கிக்கொண்டிருந்தார். இறுதியாக நன்றியுரையினை முல்லை. மாவட்ட ரீடோ நிறுவன இணைப்பாளர் மு.வரன் நிகழ்த்தினார். நிகழ்வுகள் 1.30 மணிக்கு நிறைவுபெற்றதுடன் வளநிலையத்தின் கற்பித்தல் செயற்பாடுகள் ஆரம்பமாகியது. இதில் பெருந்தொகையான மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.(கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்) போன்ற பாடங்களின்- கற்பித்தல் செயற்பாடு நடைபெற்றது.

## குழந்தைகளுக்குத் தமிழ்ப் பெயர் சூட்டிய பெற்றோருக்கு கௌரவம்

தமிழ்ப்பிள்ளைகளுக்கு தூய தமிழிலில் பெயர் சூட்டுவோருக்கு ஊக்குவிப்புத் தொகை ஒன்றை வழங்கும் திட்டம் ஒன்றை கனடா நாட்டில் ஈழத்தமிழர்களால் நடத்தப்பட்டு வரும் "சிலம்பம்" என்ற அமைப்பு ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் தங்கள் குழந்தைகளுக்கு தமிழ்ப் பெயர் சூட்டியதற்காக ஐம்பது பெற்றோர் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை திருகோணமலை சென் யோசப் கல்லூரியில் சிலம்பம் (கனடா) ஆதர வில் அதன் தாயகக் கிளையினால் நடத்தப்படும் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் பெற்றோர் ஒவ்வொருவருக்கும் தலா 1000 ரூபா பரிசுத் தொகையாக வழங்கப்படவுள்ளது. இந்நிகழ்வுக்கு விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர்கவிஞர் புதுவைஇரத்தினதுரை தலைமை வகிக்கின்றார். (25)

## கிளிநொச்சியில் கால்நடைகள் கண்காட்சி ஆகஸ்ட் முதல் வாரத்தில் நடத்த முடிவு

கிளிநொச்சியில் கால்நடைகள் கண்காட்சி ஒன்றினை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதற்கிழமை நடாத்துவதற்குத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனக் கேட்போர் கூடத்தில் த.பொ.மே.நி.பொறுப்பாளர் கரிகாலன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இக்கலந்துரையாடலில் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள வடக்கு கிழக்கு மாகாணப் பணிப்பாளர் கலாநிதி சிவலிங்கம் மற்றும், உதவிப்பணிப்பாளர்கள், கால்நடை வைத்தியர்கள், கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர் . த.பொ.மே.நிறுவனமும், மாவட்டக் கால்நடை வைத்திய அதிகாரிகளும் இணைந்து நடாத்திய இக்கலந்துரையாடலில் கால்நடை பராமரிப்பு, உணவூட்டல், நோய் தடுப்பு என்பனவற்றை மக்கள் மத்தியிலும், மாணவர் மத்தியிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தல், உள்ளூர் மாடுகளை வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்வதை தடுத்தல், கால்நடை வளர்ப்பு சம்பந்தமான அறிவூட்டல் தொடர்பாகவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டது. (15)

பொதுசன நூலகம்

# தமிழருக்கும் - புலிகளுக்கும் எதிரானதல்ல

கருணாவை மட்டக்களப்பில் இருந்து அழைத்துச் சென்றது யார்? கருணா எங்கே இருக்கின்றார்? கருணா விற்குப் பாதுகாப்பு அளிப்பது யார்? கருணா அடுத்துச் செய்யப்போவது என்ன? என்பது போன்ற கேள்விக்கு உறுதிப் படாததாக இருந்த பதில்கள் தற்பொழுது ஆளும் -


அலிசாஹிர் மௌலானா

எதிர்க்கட்சிகளின் ஒப்புதல் வாக்கு மூலங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டவை ஆகியுள்ளன.

கருணாவை மட்டக்களப்பில் இருந்து பாதுகாப்பாக, அழைத்துச் சென்றவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானாஆகும். ஐ.தே.கட்சித் தலைவருக்கு நெருக்கமான இவர் கருணாவுடனும் நெருக்கமான உறவைக் கொண்டிருந்தவர்.

கருணா தற்பொழுது கொழும்பில் இரகசியமான இடமொன்றில் சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையின் பாதுகாப்பில் உள்ளார். அவரது குடும்பத்தினரும் அவருடன் உள்ளனர். இவர்களின் தங்குமிடம் மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது. சிவில் உடையில் ஆயுதம் தாங்கிய பாதுகாவலர் உள்ளனர்.

கருணாவின் நடவடிக்கைகள் சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையினர் கிழக்கில் மேற்கொள்ளும் மேற்கொள்ளவுள்ள அழிப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவே இருக்கும்.

அண்மைக் காலத்தில் கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் நடந்த படுகொலைச் சம்பவங்களுடன் மட்டும் பேசப்பட்டுவந்த கருணா தொடர்பான விவகாரம் முன்னாள் மட்டு. அம்பாறை மகளிர் படையணித் தளபதியான நிலாவினி உட்பட நான்கு பெண் உறுப்பினர்கள் விடுதலைப்புலிகளிடம் தஞ்சமடைந்ததுடன் மீண்டும் ஒரு தடவை பேசப்படும் ஒன்றாகியுள்ளது. குறிப்பாக, கருணா தொடர்பான சில விபரங்கள் பகிரங்கமாக வெளிவந்ததைத் தொடர்ந்து அவை அரசியல் முக்கியத்துவம் மிக்க விவகாரமாகியுள்ளது.

கருணாவைவிட்டு வெளியேறி புலிகள் இயக்கத்திடம் தஞ்சமடைந்த நான்கு பேரும், ஊடகவியலாளரைச் சந்தித்து கருணாவின் தப்பி ஓடல் படலம் பற்றிய தகவல்களை வெளியிட்டனர். இதன் பிரகாரம், ஐ.தே.கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான அலிசாஹிர் மௌலானா கருணாவையும், அன்று அவருடன் சென்ற சுமார் 15 பேர் வரையிலானோரையும் கொழும்பிற்கு அழைத்துச் சென்றார் என்ற தகவல் வெளியாகியது.

அதன் பின்னர், அங்கு கருணா சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையினருடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு அவர்களின் பாதுகாப்பையும் ஏற்றுக்கொண்டார். இந்நிலையில், அவர்களால் கூட்டிச் செல்லப்பட்டவர்கள் அவரால் படிப்படியாக ஓரம்கட்டப்பட அவர்களும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப கருணாவைவிட்டு வெளியேறிவிட்டனர்.

இவ்வாறு வெளியேறி புலிகளிடம் தஞ்சமடைந்துள்ள நிலாவினி உட்பட நான்கு பேர் ஊடகவியலாளரிடம் தெரிவித்த கருத்துக்கள், தென்னிலங்கை அரசியல் சக்திகள், ஆயுதப் படைத் தரப்பினர் கருணா விவகாரத்தில் கொண்டிருந்த தொடர்புகளையும் அவர்கள் காட்டிய அக்கறையையும் வெளிக்காட்டுபவையாக இருந்தன. அத்தோடு,இவர்கள் கூறிய தகவல்கள் தென்னிலங்கையில் ஒரு அரசியல் நெருக்கடியையே தோற்றுவித்துள்ளதெனலாம்.

ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானாவே கருணாவை அழைத்துச் சென்றார் என்ற தகவல் கருணாவின் விவகாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியைத் தொடர்புபடுத்துவதாகியது. அதாவது, ஐ.தே.கட்சி நோக்கி குற்றம்சாட்டுவதாக விரல்கள் நீட்டப்பட்டன.

இது ஐ.தே. கட்சியை சற்று தடுமாற வைத்ததென்றே கூறலாம். ஏனெனில், தன்னை சமாதான முயற்சியின் பாதுகாவலர் என அக்கட்சி பிரச்சாரப்படுத்திக் கொண்டிருக்கையில் - இத்தகவலானது ஐ.தே.கட்சி வேடம்போடுகின்றது என்ற தோற்றப்பாட்டை உருவாக்குவதாக இருந்தது.

# அமைதிக்கும், சமாதானத்திற்குமே எதிரானது!

இதனை வலியுறுத்தும் வகையில், ஆளும் கட்சியின் அமைச்சரவைப் பேச்சாளரான மங்கள சமரவீரவும் தமது பங்கிற்குச் சமாதான முயற்சிகளுக்கு எதிராக, ஐ.தே. கட்சி செயற்படுவதாகக் குற்றம் சாட்டினார்..

இதேவேளை, அலிசாஹிர் மௌலானாவும் இக்குற்றச்சாட்டை மறுத்துரைக்க முடியாத நிலையிலேயே இருந்தார். மனிதாபிமான ரீதியிலும், நட்பு ரீதியிலும் தான்கருணாவிற்கு உதவியதாகவும், தனது இந்நடவடிக்கை ஐ.தே. கட்சியின் தலைமைக்குத் தெரிவிக்கப்படவில்லை எனவும் அலிசாஹிர் மௌலானா விளக்கம் அளித்தார்.

ஆனால், அலிசாஹிர் மௌலானாவின் இப்பதில்கள் ஐ.தே.கட்சியின் தலைமைத்துவத்தை இந்நெருக்கடியில் இருந்து காப்பதற்கானதென்பது அனைவருக்கும் தெரிந்ததொன்றே. அதாவது, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியலுக்குக் களங்கம் ஏற்படாமல் பாதுகாப்பதற்காக அலிசாஹிர் மௌலானா இதனைக்கூற வேண்டியும் பதவி விலக வேண்டியும் வந்தது என்றே கொள்ளலாம்.

ஆனால், அலிசாஹிர் மௌலானாவின் ஒப்புதல் வாக்கு மூலம் ஐ.தே.கட்சி யின் கைவிரிப்பும் எந்த வகையில் ஏற்றுக் கொள்ளத்தக்கது. அதாவது, ஐ.தே. கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவிற்கு மிகவும் நெருங்கியவரும், கிழக்கு மாகாணம் குறித்த ஆலோசகருமான அலிசாஹிர் மௌலானா இவற்றைத் தனிப்பட்ட ரீதியில் மேற்கொண்டார் எனக் கூறுவது எவ்வாறு நம்பத்தக்கதாக இருக்கும்.

கருணாவுடனான அலிசாஹிர் மௌலானாவின் உறவு ஐ.தே.கட்சியின் தலைமையின் ஆசீர்வாதத்துடன் மேற்கொள்ளப்படடதோ இல்லையோ ஆனால், ஐ.தே.கட்சியின் தலைமைக்குத் தெரியாது இந்த உறவு இருந்துள்ளதற்கான வாய்ப்போ, ஐ.தே.கட்சியின் தலைமைக்குத் தெரியாது அலிசாஹிர் மௌலானாவினால் கருணா கொழும்பிற்கு அழைத்துவரப்பட்டதற்கான வாய்ப்பே இருந்திருக்கமுடியாது.

மறுபுறத்தில், இராணுவப் புலனாய்வுத்துறையினரின் பாதுகாப்பில் கருணா உள்ளார் என்பதும், டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் அவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளனர் எனவும் வெளிவந்த தகவல்கள் ஆளும் கட்சித் தரப்பினரையும் சங்கடத்திற்கு உள்ளாக்கியது. மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாத நிலையில் சில பதில்களை அரசாங்கத் தரப்பினரும் கூறவேண்டியே இருந்தது.

இதன் வெளிப்பாடே ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, இராணுவத்தின் ஒரு தரப்பினர் கருணாவிற்கு உதவியிருக்கலாம் எனத் தெரிவிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தைக் கொடுத்தது. இதேவேளை, அரசாங்கத்தைப் பாதுகாக்கும் பொருட்டு இதற்கும் அரசாங்கத்திற்கும் தொடர்பில்லை எனவும் கூறவேண்டிய தேவை எழுந்துள்ளது.

ஆனால், அமைச்சர் மங்கள சமரவீர அரசாங்கத்திற்கு இவ்விடயத்தில் தொடர்பில்லை எனத் தெரிவித்தமையானது எவ்வாறு அலிசாஹிர் மௌலானாவின் நடத்தையை ஐ.தே. கட்சியின் தலைமை அறிந்திருக்கவில்லை எனக் கூறுகின்றதோ அதற்கு ஒப்பானதாகும். அதாவது, அரசாங்கம் அறிந்திராமல் இராணுவத் தரப்பினால் தன்னிச்சையாக எதுவுமே மேற்கொள்ளப்பட்டதாக இருக்கமுடியாது.

மாறாக அவ்வாறுதான் நடந்ததென சாதிக்க அரசாங்கம் முனையுமானால் தமது கொள்கைக்கு மாறாகச் செயற்பட்ட இராணுவத்தினர் மீது நடவடிக்கையை மேற்கொள்ள முடியுமா? அன்றி கருணா கொழும்பில் எங்கிருக்கின்றார் என்பதை பகிரங்கமாக வெளிப்படுத்தத்தான் முடியுமா?

கருணா மட்டக்களப்பில் இருந்த வேளை, சிறிலங்கா இராணுவத் தரப்பு கருணாவிற்கு ஆதரவான முழு அளவிலான செயற்பாடுகளில் இறங்கியிருந்தது என்பது வெளிப்படையானதொன்று. இராணுவம் வழங்கிய ஒத்துழைப்பால் கருணா குழுவினர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஆயுதங்களுடன் நடமாடவும், ஒலி பெருக்கிகள் மூலம் அறிவிப்புக்களை வெளியிடவும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாழ்ந்த வடபகுதி மக்களை வெளியேற்றவும் முடிந்ததோடு, இராணுவத்தின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்த வீதிகளை ஆயுதங்களுடன் கடக்கவும், வீதிகளில் ஆயுதங்களுடன் நின்று சோதனையிடவும் முடிந்தது.

இவையாவும் ஓரிரு அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் மட்டும் மேற்கொள்ளப்பட்டதாக அரசாங்கத் தரப்புக் கூறவிளைவதானது அரசாங்கம் இவ்விடயத்தில் நேர்மையாகச் செயற்படவில்லை என்பதையே வெளிப்படுத்துவதாகும். இவற்றிற்கு ஆதாரம் தேடுவதென்பதும், கோருவதென்பதும் விவகாரத்தைப் புறந்தள்ள மேற்கொள்ளப்படும் முயற்சியாகவே கொள்ளத்தக்கதாகும்.

ஆகையினால், ஆளும் கட்சி அரசாங்கம் கருணாவுடன் தொடர்பு எதையும் கொண்டிருக்கவில்லை என்பதும், இராணுவத் தரப்பு உதவிகள் எதையும் செய்யவில்லை என மறுப்பதும் கருணா விடயத்தை தமக்கு இராணுவ, அரசியல் ரீதியில் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கில் கையாள முற்படுவதாகவே கொள்ள முடியும்.

அடுத்ததாக அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் ஈ.பி.டி.பி. குழுவின் தலைவரான, டக்ளஸ் தேவானந்தா கருணாவுடன் தொடர்பு இருப்பதாகக் கூறுகையில், அரசாங்கம் எவ்வாறு கருணாவிற்கும் தமக்கும் தொடர்பில்லை எனக் கூறமுடியும். டக்ளஸ் தேவானந்தா அரசாங்கத்தில் அங்கம் வகிக்கவில்லையா? அன்றி டக்ளஸ் தேவானந்தாவை அமைச்சர் என்ற ரீதியில் அவர்கள் நோக்கவில்லையா?

இதற்கு அடுத்ததாக, கொழும்பில் தங்கவைக்கப்பட்டுள்ள கருணாவின் நடவடிக்கைகள் என்னவாக இருக்கும் என்பதற்கு ஏற்கனவே எடுத்துக்காட்டுகள் கிடைத்துவிட்டன. கிழக்கில் தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தை வலுவிழக்கச் செய்யும் வகையில் அழிவு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான ஒத்துழைப்பை வழங்குவதாகவே இருக்கமுடியும்.

இந்த வகையில் ஏற்கனவே, புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள், பொது மக்கள் எனப் பலர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதைத் தவிர விடுதலைப் புலிகள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இவையாவும் கருணாவின் பெயரிலேயே நடாத்தப்பட்டவையாகும்.

இதேவேளை, கருணாவை தேசிய அரசியல் நீரோட்டத்தில் பங்கேற்க அழைத்துவர முயற்சிப்பதாக ஈ.பி.டி.பி. குழுவின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார். ஆனால், டக்ளஸ் தேவானந்தாவின் தேசிய அரசியல் நீரோட்டம் என்பது சிறிலங்கா இராணுவத்துடன் சேர்ந்து பணியாற்றுதல், காட்டிக்கொடுத்தல், அதற்கான ஊதியத்தையும் சலுகைகளையும் பெறுதல் என்பதோடு, மோசடி அரசியல் மூலம் பாராளுமன்ற ஆசனத்தைப் பெற்றுத் தமது சலுகைகளையும், வாய்ப்புக்களையும் பெருக்கிக்கொள்ளுதல் என்பதே ஆகும்.

தற்போதைய நிலையில் கருணாவும் இதற்குப் பொருத்தப்பாடான ஒருவரே. ஆயினும், கருணா அரசியல் நடத்தவிளைவாரா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க முடியும். ஏனெனில், கருணாவின் தற்போதைய நடவடிக்கையானது அதற்குச் சாதகமானதாக இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால், எது எவ்வாறாயினும், கருணா தொடர்பான விவகாரத்திலிருந்து சிறிலங்கா அரசியல் கட்சிகள் குறிப்பாக, ஆளும் - எதிர்க்கட்சிகள் தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பாகத் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை, தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு எதிராகத் தம்மாலான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சகல சந்தர்ப்பத்தையும் தவறாது பயன்படுத்துவதில் முனைப்பாகவே உள்ளனர். என்பது வெளிப்படுத்தப்படுவதாகவே உள்ளது.

இவர்களின் இந்நடவடிக்கையானது விடுதலைப்புலிகளைப் பலவீனப்படுத்துதல் என்னும் நோக்கில், தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தைப் பலவீனப்படுத்துதல் என்பதையே நோக்கமாகக் கொண்டதாகும். அதாவது, சமாதான முயற்சிக்கு முற்றுப்புள்ளிவைத்து நாட்டை யுத்தத்தை நோக்கி இழுத்துச் செல்லும் நோக்கிலானது ஆகும்.

ஆனால்,இவர்களின் இந்நடவடிக்கையானது, விடுதலைப்புலிகளுக்கும், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கும் எதிரானதல்ல. யுத்த நிறுத்தத்திற்கும், சமாதான முயற்சிகளுக்குமே எதிரானது. வேறுவிதமாகக் கூறப்போனால், இலங்கையின் அரசியல் எதிர்காலத்தையே தீர்மானிக்கும் ஒன்றானதாகக்கூட இது மாறிவிடக்கூடியது. ○

-ஜெயராஜ்

# வாஜ்பாயை புறம்தள்ளி பா.ஜ.க. தீவிர மதவாதம் நோக்கி...

அ. கலைவாணி

பாரதிய ஜனதாக் கட்சி மக்களவைத் தேர்தலில் படு தோல்வியடைந்தமைக்கு காரணம் என்ன....? என்று அக்கட்சி ஆராய முற்பட்டதன் விளைவு- "பாரதிய ஜனதா கட்சிக்கு மீண்டும் ஒருபோதும் தலைமை ஏற்பதில்லை" எனும் வாஜ்பாயின் விலகலுக்கு வழி சமைத்துவிட்டது.


வாஜ்பாயின் இந்த திடீர் அறிவிப்பு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அதேவேளை இந்துத்துவக் கொள்கையை மீண்டும் பாரதிய ஜனதா உறுதிபடக் கைக்கொள்ளும் எனும் எல்.கே அத்வானியின் அறிவிப்பும் இரட்டிப்புப் பரபரப்பை ஏற்படுத்தாமல் இல்லை.

பாரதிய ஜனதா தமது தோல்விக்கு என்ன காரணம் என்று கண்டு கொண்டதோ இல்லையோ தெரியவில்லை. ஆனால் அக்கட்சியினுள் உட்பூசல்களும் குழப்பங்களும் அதிகமாக தலை தூக்கியதுதான் அக்கட்சி கண்டமிச்சம் என்று கூறமுடியும்.


அதுமட்டுமன்றி அக்கட்சியினுள் தலைதூக்கிய பூசல்கள் யாவும் அதிகரித்ததே தவிர குறையவில்லை. அத்துடன் அக்கட்சியின் தோல்விக்கு ஒருவர் மட்டுமே காரணம் என்று யாராவது ஒருவர் தலையில் முழுப் பொறுப்பையும் சுமத்திவிடவும் தான் அக்கட்சி தீவிரம் காட்டி வந்துள்ளது.

இதனால் கட்சிக்குள் முரண்பாடுகள் தலைதூக்கியது. இந்த முரண்பாடுகளின் அதி உச்சம்தான் "பாரதிய ஜனதா கட்சிக்கு மீண்டும் ஒருபோதும் தலைமை ஏற்கப் போவதில்லை" எனும் முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் அறிவிப்பு எனலாம்.

ஏனெனில் மக்களவையின் படுதோல்விக்குக் காரணம் குஜாரத்தில் நரேந்திர மோடியின் பதவிக் காலத்தில் ஏற்பட்ட மதக் கலவரம் தான் என்று வாஜ்பாய் அண்மையில் குற்றம் சாட்டியிருந்தார்.


அத்வானி


வெங்கையாநாயுடு


நரேந்திரமோடி

அது மட்டுமன்றி பாரதிய ஜனதாவின் இம்மாத இறுதியில் நடைபெறும் செயற்குழுக் கூட்டத்தில் நரேந்திர மோடியின் விடயம் ஆராயப்படும். அவரைப் பதவி விலக்குவதற்கான நடவடிக்கைகளே அக்கூட்டத்தில் பிரதானமாக ஆராயப்படவுள்ளது. என்றும் வாஜ்பாய் கூறியிருந்தார்.

ஆனால் நரேந்திரமோடிக்கும் மக்களவைத் தேர்தல் தோல்விக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று விஸ்வ ஹிந்து பரிசட், ராஷ்டிரிய சுயம் சேவக் (ஆர்.எஸ்.எஸ்) போன்ற சங்பரிவார அமைப்புக்கள் வாஜ்பாயிக்கு எதிராக போர்க்கொடி தூக்கிவிட்டன.

அது மட்டுமன்றி மக்களவைத் தோல்விக்குக் காரணம் வாஜ்பாய்தான் என்றும் இந்துக்களுக்கு எதிராக வாஜ்பாய் செயற்பட்டார்; அயோத்தியில் இராமர் கோயில் கட்டப்படாமல் ராமஜென்ம இயக்கத்தை நசுக்கிவிட முற்பட்டார்; சங்பரிவார அமைப்பில் ஓர் அங்கமாக இருக்கின்றாரா என்பது சந்தேகம் தான் எனவும் அவை சாடின.

ஏனெனில் இந்தியாவில் மதமாற்றம் வேகமாகப் பரவி வருகின்றது. இதனால் வடக்கு,கிழக்கு மாநிலங்களில் இந்துக்கள் வாழ முடியாத பரிதாபம் ஏற்பட்டுள்ளது. இதற்கும் வாஜ்பாய்தான் காரணம். பிரதமராக அவர் இருந்த பதவிக் காலத்தில் இந்துத்துவ கொள்கைக்காக எதுவுமே செய்யவில்லை. அதனால்தான் பாரதிய ஜனதா மக்களவையில் மண் கௌவியது என்று சங்பரிவாத அமைப்பு வாஜ்பாயிக்கு எதிராக கோசமெழுப்பியிருந்தன.

சங்பரிவார அமைப்பின் கருத்தை ஒப்பிப்பது போலவேதான் பாரதிய ஜனாதாவின் செயற்குழுக் கூட்டத்தில் நரேந்திரமோடி பதவி விலக்கப்பட தேவை ஏற்படவில்லை என்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

அதாவது வாஜ்பாயின் கருத்து செல்லுபடியாகவில்லை. வாஜ்பாயின் கருத்து தூக்கியெறியப்பட்டிருக்கின்றது என்றுதான் கருத முடியும்.

இதேவேளை செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள சங் பரிவார அமைப்பு பாரதிய ஜனதாவின் தலைமைப் பதவியை அத்வானிதான் ஏற்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன.

ஆக மொத்தம் வாஜ்பாயினை அரசியலை விட்டே ஒதுக்குவதில்தான் சங் பரிவார அமைப்பு மும்முரமாக இருக்கின்றதா என்று வினா எழாமலில்லை.

அது மட்டுமன்றி வாஜ்பாயின் அறிவிப்புப் பற்றியோ, சங் பரிவார அமைப்பின் வலியுறுத்தலுக்கோ எல்-கே. அத்வானியோ வெங்கையா நாயுடுவோ வாஜ்பாயிக்கு ஆதரவாகவோ சங்பரிவார அமைப்புக்களின் கருத்தை மறுத்தோ கருத்து எதையும் இதுவரை கூறவில்லை.

மாறாக பாரதிய ஜனதா மீண்டும் இந்துத்துவ கொள்கையைக் கடைப் பிடிப்பதன் மூலம் மீண்டும் ஆட்சிக்கு வரும் என்றுதான் எல். கே. அத்வானி கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

அதாவது வாஜ்பாயிற்கும் அத்வானிக்குமிடையே இதுவரை நிலவிவந்த மௌன யுத்தம் தற்போது அம்பலமாகியிருக்கின்றது. தமக்கிடையே முரண்பட்டுக் கொள்வதனை எதிர்க்கட்சிகள் தமக்கு சாதகமாக்கிவிடும் எனும் அச்சம் காரணமாக இருவரும் மௌனமாகவே வெளியே தெரியாதபடி முரண்பட்டுக் கொண்டிருந்தனர் என்பதும் தெரியவருகின்றது.

ஏனெனில் பாரதிய ஜனதா என்ற கட்சியினுள் இரு வேறு போக்குடையவர்கள்தான் இருக்கின்றார்கள் எனும் அவதானிகள் கருத்து பொய்த்துப் போகவில்லை.

அந்தவகையில் அத்வானி, வெங்கையா நாயுடு போன்றோர் தீவிர இந்துத்துவப் பிரியர்கள். ஆனால் வாஜ்பாயோ அவர்களிலிருந்து வித்தியாசமான மிதவாதி. இந்துத்துவ தீவிரமும் மிதவாதமும் இணைந்திருக்கின்றதே..... எனும் அப்போதைய வினாவுக்கு ஆறாண்டுகளின் முடிவில் விடைகிடைத்திருக்கின்றது.

மக்களவைத்தேர்தல் தான் இந்த விடையினை வெளிக்காட்டி இருக்கின்றது. மிதவாதியான வாஜ்பாய் தொடர்ந்தும் பாரதிய ஜனதா கட்சிக்கும் அங்ககம் வகிப்பாரா... அல்லது விலகி கவிதை எழுதுவதிலேயே முழுநேரத்தையும் செலவிடுவாரா... என்பது பாரதிய ஜனதாவின் செயற்பாடுகளில்தான் தங்கியிருக்க முடியும்.

இதேவேளை நடந்து முடிந்த பாரதிய ஜனதாவின் செயற்குழுக் கூட்டத்தில் எதிர்காலத்தில் இந்துத்துவா பற்றிய கொள்கை மீண்டும் வலுப்பெறும் என்பது தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அறிவிப்பை எல்.கே.அத்வானிதான் வெளியிட்டுள்ளார். இந்துத்துவாவை மக்களவைத் தேர்தலில் பயன்படுத்தவில்லை. அதனால் தான் தோல்வி ஏற்பட்டது என்பது வாஜ்பாய் தவிர்ந்த ஏனைய பாரதிய ஜனதா தலைவர்களின் கருத்து மட்டுமல்ல நம்பிக்கையும் கூட.


ஏனெனின் 1984இல் இரண்டே இரண்டு லோக்சபா ஆசனங்களுடன் இருந்த பாரதிய ஜனதா 1991இல் 110 இடங்களைக் கைவசப் படுத்துவதற்கு பிரயோகித்த கொள்கை இந்துத்துவா தான்.

பாரதிய ஜனதாக் கட்சியைப் பொறுத்த வரை இந்துத்துவம் என்பது பெறுமதிமிக்க பிரமாஸ்த்திரம் தான். அதனைக் கையில் எடுக்காது விட்டால் அயோத்தி இடிப்பு வழக்குடன் தொடர்புடைய அனைவரும் அத்வானி உட்பட வெளியில் நடமாடுவது இயலாத காரியம்.

இதேவேளை குஜராத்தின் நரேந்திரமோடிக்கு எதிரான உணர்ச்சி அலைதான் வீசிக் கொண்டிருக்கின்றது. முன்னாள் குஜராத் முதலமைச்சர் கேசுபாய் படேல் அதற்கான நடவடிக்கைகளைத் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கின்றார் . அத்துடன் நரேந்திர மோடியின் அரசில் அங்கம் வாகிக்கும் 127பேரில் 85பேர் மோடிக்கு எதிராக அதாவது மோடியைப் பதிவிநீக்க வேண்டும் எனும் துடிப்பில் இருக்கின்றார்கள்.

இதேவேளை நடந்து முடிந்துள்ள மக்களவைத்தேர்தலில் இம்முறை குஜராத்தில் காங்கிரஸ் கட்சி 12 இடங்களில் வெற்றி பெற்றிருக்கின்றது. இதனால் நரேந்திர மோடிக்கு எதிரான எதிர்ப்பலை அதிகரிக்கும் வாய்ப்புக்கள் அதிகம். இதனால்தான் வாஜ்பாய் நரேந்திர மோடியைப் பதவிநீக்கம் செய்ய வேண்டும் என்று கருதியிருக்க முடியும்.

ஆனால் இவற்றையெல்லாம் விடவும் மறுக்க முடியாத உண்மை ஒன்றுள்ளது.


வாஜ்பாய்

மக்களவைத் தேர்தல் தோல்விதான் வாஜ்பாயின் கண்களை அகலத்திறந்து விட்டதா.......? குஜராத்தில் 2002இல் மதக்கலவரம் வெடித்து. 600இற்கும் மேற்பட்ட முஸ்லிமகள் படுகொலை செய்யப்பட்டனர். ஒன்பது மாதங்களுக்கும் மேலாக கலவரம் தொடர்ந்த போதும் அப்போது பிரதமராக இருந்த வாஜ்பாய் பேசாமடந்தையாக இருந்து விட்டு இன்று மக்களவைத் தேர்தல் தோல்விக்கு நரேந்திரமோடி தான் காரணம் என்பது நெருடலான கருத்தாகவே இருக்கின்றது.

ஆக மொத்தத்தில் பாரதிய ஜனதாக் கட்சி மக்களவைத் தேர்தலில் ஏன் தோல்வியடைந்தது என்று அக்கட்சி ஆராயமுற்படவும் இல்லை. அக்கறைகாட்டவும் இல்லை. மாறாக ஒருவர்மாற்றி ஒருவர் குற்றச்சாட்டுக்களை மற்றவர்கள் மீது சுமத்தி தாங்கள் தப்பித்துக் கொள்ளத் தான் புத்திசாலித்தனம் காட்டுகின்றார்கள்.

பாரதிய ஜனதாகட்சி மக்களவைத் தேர்தலில் மிக மோசமாக தோல்வியடைய,


* கருத்துக்கணிப்புக்கள் மீது கொண்ட அதீத நம்பிக்கை.
* ஆறாண்டு ஆட்சிக் காலத்தினுள் இந்தியா ஒளிர்கின்றது எனும் கோஷம்.
*மாநிலங்களில் செல்வாக்குப் பெறாத கட்சிகளுடன் கூட்டணி.
* எதிர்க்கட்சியினரை மிகவும் மோசமாக விமர்சிப்பு.
*வாஜ்பாயிக்கு நிகராக எதிர்க்கட்சித் தலைவராக சோனியாகாந்தி இல்லை எனும் அதீத நம்பிக்கை.
* வடமாநிலங்கள் சிலவற்றில் கடந்த சட்டசபைத் தேர்தலில் கிடைத்த வெற்றி
* வடமாநிலங்களைப் போலவே ஏனைய மாநிலங்களும் தம்வசம் ஆகும் தவறான மனக்கணக்கு.
* அவசரப்பட்டு, தமது ஆட்சிக்காலம் முடிவதற்குள் மக்களவையைக் கலைத்து தேர்தல் நடத்தியமை போன்றனவே காரணங்களாக இருக்கமுடியும்.

ஆனால் இவற்றையெல்லாம் பாரதிய ஜனதா கவனத்தில் கொள்ளவில்லை. அதனால் மிகப்பழுத்த அரசியல் வாதி வாஜ்பாயின் தலைமைத்துவத்தை இழக்க நேர்ந்துள்ளது. இந்த இழப்பு பாரதிய ஜனதாவை வளர்ச்சிக்கு இட்டுச்செல்லுமா....... அல்லது எதிர்மாறான விளைவுகளைக்காண வழியமைக்குமா...... என்பதை எதிர்காலத்தில் தான் பார்க்க முடியும்.!

★ ★ ★

# விழிப்புணர்வு அறிவுறுத்தல்களை மீறுவது அதிக வெடிவிபத்துகளுக்கு காரணமாகின்றது

## கண்ணிவெடி விழிப்புணர்வு தொடர்பாக வன்னிக்கான இணைப்பாளருடனான சந்திப்பு



வெடிபொருள் பற்றிய விழிப்புணர்வு ஒவ்வொரு மனிதனிடமும் இருக்க வேண்டும். தவறும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் உயிர் குடிப்பதற்காக நிலத்தில் புதைந்திருக்கின்ற வெடிபொருட்களுக்கு இரையாக வேண்டி நேருடுகின்றது.

எனவே வெடிபொருள் எச்சரிக்கைப் பதாகைகளைக் கருத்தில் கொண்டு அச்சுறுத்தல் உள்ள பகுதிகளாக இனங்காணப்பட்ட பகுதிகளில் பிரவேசிக்காது விலகி இருப்பதன் மூலம் எமது உயிரை நாமே உத்தரவாதப்படுத்திக் கொள்ள முடியும் என கண்ணி வெடிவிழிப்புணர்வு வாரத்தை ஒட்டி ஈழநாதம் நாழிதழுக்கு வழங்கிய செவ்வியில் வெண்புறா நிறுவனத்தின் வன்னிக்கான வெடிபொருள் விழிப்புணர்வுக் கல்வித்திட்ட இணைப்பாளர் சி.சந்திரசேகரம் பிள்ளை தெரிவித்துள்ளார்.

**வன்னிப்பகுதியில் வெடிபொருட்களின் தாக்கம் எவ்வாறு உள்ளது?*

வன்னிப்பகுதியில் வெடிபொருட்களின் தாக்கம் 2000 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தான் தனது ஆதிக்கத்தைச் செலுத்தி வருகிறது. இராணுவ நகர்வுகளுக்காக பயன்படுத்தப்பட்ட வெடிபொருட்கள் இராணுவ நகர்வுகள் தோல்வியில் முடிவடைந்ததன் பின்னரும் அகற்றப்படாத காரணத்தால் பெருமளவான மக்கள் அதில் சிக்கவேண்டிய அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். வெடிபொருட்களின் தாக்கம் எப்போது ஆரம்பிக்கப்பட்டதோ அப்போதிருந்தே நாமும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை செயற்படுத்தி வருகிறோம். ஆரம்பத்தில் நிகழ்ந்த வெடிபொருள் விபத்துக்களை விட இப்போது வெடிபொருள் விபத்துக்கள் வெகுவாகக் குறைந்திருக்கிறது. இந்த வகையில் கடந்த 2000 ஆம் ஆண்டு 119 விபத்துக்கள் நடைபெற்றன. இதில் 131 பேர் பாதிப்படைந்துள்ளனர். இவர்களில் 15 பேர் உயிரிழந்துள்ளனர். அதேபோல 2001ஆம் ஆண்டு 31 விபத்துக்கள் இடம் பெற்றுள்ளன. இதில் 51 பேர் பாதிப்படைந்துள் ளனர். இவர்களில் 03 பேர் உயிரிழந்துள்ளனர். அதேபோல 2002 ஆம் ஆண்டு 23 விபத்துக்களில் 32 பேர் பாதிப்படைந்து 07 பேர் உயிரிழந்துள்ளனர். 2003 ஆம் ஆண்டு 15 விபத்துக்களில் 17 பேர் பாதிப்படைந்திருந்தனர். இதில் எவரும் உயிரிழக்கவில்லை. இது எமது விழிப்புணர்வுச் செயற்பாட்டின் பயன் எனக்கருத முடியும். 2004 ஆம் ஆண்டு இன்றுவரை இரண்டு விபத்துக்கள் நிகழ்ந்திருக்கின்றன. அதில் 05 பேர் பாதிப்படைந்திருக்கிறார்கள் இவர்களில் 04 பேர் உயிரிழந்திருக்கிறார்கள்.

**.வன்னியில் வெடி பொருட்களின் தாக்கம் எந்தப்பகுதிகளில் அதிகமாக இருப்பதாக நீங்கள் இனங் கண்டிருக்கிறீர்கள்?*

வன்னியில் வவுனியா வடக்கு, நெடுங்கேணி, மாங்குளம், கிளிநொச்சியில் கரைச்சிப்பகுதி, பளை, வடமராட்சி கிழக்கு, பூநகரி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் தான் வெடிபொருட்கள் அதிகம் காணப்படுகிறது. கண்ணிவெடிகளை அகற்றுகின்ற செயற்பாட்டினை நாம் மேற்கொள்வதில்லை. அது தொடர்பான விழிப்புணர்வையே நாம் வெண்புறா நிறுவனம் ஊடாக மேற்கொண்டு வருகிறோம்.

**கண்ணிவெடி விழிப்புணர்வு செயற்பாட்டை எந்தவகையில் மேற்கொண்டு வருகிறீர்கள்?*

வெடிபொருள் விழிப்புணர்வை நாம் பாடசாலை ரீதியாகவும், கிராம ரீதியாகவும் வாய்மூலமாக விழிப்புணர்வுக் கல்வியை ஆரம்பத்தில் வழங்கினோம். இதனால் பலர்பயன் பெற்றார்கள். நாளடைவில் கண்ணிவெடிப் பிரதேசங்கள் விரிவுபட்டன. இதனால் எமது விழிப்புணர்வு செயற்பாட்டையும் விரிவுபடுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதனால் எமது விழிப்புணர்வு செயற்பாட்டை விரிவுபடுத்தினோம்.

ஆரம்பத்தில் வாய் மூலம் மக்களை விழிப்படையச் செய்தோம். பின்னர் துண்டுப்பிரசுரங்கள், வானொலி மூலமாகவும், ஒலி பெருக்கிகள், பத்திரிகைகள், வீதிநாடகங்கள் போன்ற பல்வேறு வடிவங்களில் எமது விழிப்புணர்வு செயற்பாட்டை அதிகரித்திருக்கிறோம். இதனால் வன்னியில் வாழ்கின்ற 90 வீதமான மக்கள் வெடிபொருட்களின் தாக்கத்தை புரிந்திருக்கிறார்கள். விழிப்புணர்வு செயற்பாட்டால் மக்கள் தமது உயிர்களையும் உடலுறுப்புக்களையும் பாதுகாத்துக்கொள்கின்ற நிலைக்கு வந்திருக்கிறார்கள். இது எமக்குக் கிடைத்த வெற்றி என்றுதான் சொல்ல வேண்டும்.

** உங்களின் தரவுகளின் படி வன்னிப் பகுதியில் வெடிபொருள் விபத்துக்களில் சிக்கி உயிரிழப்பவர்களின் தொகை 2003 ஆம் ஆண்டு பூச்சியமட்டத்திற்கு சென்றிருந்தது. ஆனால் இவ்வருடம் நடுப்பகுதி வரையில் நால்வர் உயிரிழந்துள்ளனர். இந்த நிகழ்வு மக்கள் விழிப்புணர்வை இழந்து வருகின்றனர் என்பதை எடுத்துக் காட்டுகிறதா?*

விழிப்புணர்வு இல்லை என்று நாம் கூறிவிடமுடியாது. ஆனால் மக்கள் தமது அத்தியாவசிய தேவைகளுக்காக எம்மால் அவர்களுக்குத் தெளிவு படுத்தப்பட்ட விழிப்புணர்வு அறிவுறுத்தல்களையும் மீறி தடைசெய்யப்பட்ட பிரதேசங்களுக்குள் பிரவேசிப்பது தான் இதற்கான முக்கிய காரணம். அடுத்ததாக தமது கைகளில் கிடைக்கின்ற வெடிபொருட்களை ஆராய முற்படுகின்றனர். இவ்வாறு ஆராய முற்பட்ட இரண்டு வாலிபர்கள் அது வெடித்ததில் பாதிப்படைந்தனர். இவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இது ஒட்டுசுட்டானில் இந்தவருடம் நடைபெற்ற சம்பவம். இதே வேளை அண்மையில் மூன்று பேர் உயிரிழப்பதற்கு காரணமாக அமைந்த சம்பவம் அது தடைசெய்யப்பட்ட பகுதிக்குள் சென்றமைதான் விபத்துக்கு காரணமாக அமைந்தது.

*மீள்குடியமர்வு நிதியை பெறவேண்டுமானால் மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமர வேண்டும் என்ற காரணத்தால் வெடிபொருள் அபாயம் நிறைந்த பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர்ந்து வருகிறார்கள் இதனால் வெடிபொருள் விபத்துகள் இடம் பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகளவில் உள்ளது என ஒரு கருத்து நிலவுகிறது. இதனைக் கட்டுப்படுத்த நீங்கள் ஏதாவது நடவடிக்கைகள் எடுத்தீர்களா?*



இது தற்போது மக்கள் மத்தியில் உள்ள பெரும் பிரச்சினை. இந்தப் பிரச்சினைக்கான தீர்வை அரச அதிகாரிகள் தான் எடுக்க வேண்டும். மக்கள் தமது உடலுறுப்புக்களை, உயிரை மீள் குடியமர்வுக் கொடுப்பனவுக்காக விலையாக கொடுப்பதா? இல்லையா? என்பதை இவர்கள்தான் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். எம்மைப் பொறுத்தவரை நாம் இதற்கு முற்றாக தடைவிதித்திருக்கிறோம். மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற இந்த அவல நிலையை எப்படித்தடுப்பது? என்பது பற்றிநாம் தீவிரமாக ஆராய்ந்து வருகிறோம். இந்த செயற் பாட்டுக்கு எதிராக அடுத்த வெடிபொருள் தொடர்பான கூட்டத்தில் எமது ஆட்சேபத்தை தெரிவிக்க உள்ளோம்.

*கடந்த 2000ஆம் ஆண்டு முதல் இன்று வரையான காலம்வரை 29 பேர் வெடிபொருட்களின் தாக்கத்தால் உயிரிழந்திருப்பதாக கூறுகிறீர்கள். இதில் எத்தகையோர் அதிகளவில் சிக்கியுள்ளனர்?*

அனேகமாக 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட ஆண்கள்தான் இவ்வாறான விபத்துக்களில் சிக்கி இறந்துள்ளனர். தமது சொந்த காணிகளைப் பார்வையிடுவதற்காக செல்கின்றமைதான் இதற்கான காரணமாக அமைந்துள்ளது. உழைப்பிற்காக காணிகளில் இறங்குகின்றனர் இதனால் இவர்கள் பெருமளவில் வெடி பொருள் விபத்துக்குள்ளாகின்றனர்.

**தற்போது வன்னிப் பகுதியில் வெடி பொருள் அகற்றும் பணி எந்தளவு வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது?*

கண்ணி வெடி அகற்றுகின்ற செயற்பாடு வேகமாக நடைபெறுகின்றது என்று கூறமுடியாது. ஏனெனில் வன்னிப் பெருநிலப் பரப்பு எங்குமே கண்ணிவெடிகள் விதைக்கப்பட்டிருக்கின்றன. இதனால் வெடிபொருள் அகற்றும் பிரிவினர் பலதிசைகளில் தமது பணியைச் செய்யவேண்டி உள்ளது.

**அ.லோகீசன்**

# தொழிற்பயிற்சியை நிறைவு செய்தோருக்கு சிறப்புச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

சமுதாய முன்னேற்ற நிலையம், வடக்கு தொழில் பயிற்சி நிலையம், கிளிநொச்சி வலய கல்விப் பணிமனை ஆகியவற்றின் அனுசரணையுடன் ஜெயந்தி நகர் பெண்கள் தொழிற்பயிற்சி நிலையத்தினரால் இரண்டாம் முறை நடத்தப்பட்ட சிறப்பு தொழில் பயிற்சி பெற்று நிறைவு செய்த மாணவிகளுக்கான சிறப்பு சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் மாலை 4.00 மணியளவில் இடம் பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக தமிழீழ தேசியக் கொடியினை அரசியல் துறைதுணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து அகவணக்கம் முடிவுற்றதும் மங்கல விளக்கினை கரைச்சி பிரதேச செயலர் பொன் நித்தியானந்தம், முறைசாராக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சின்னத்துரை ஆகியோர் ஏற்றி வைத்தனர். அதனைத் தொடர்ந்து பயிற்சி பெற்ற மாணவர்களால் செய்யப்பட்ட மட்பாண்ட பொருட்கள், கேக்ஐசிங், தலைஅலங்காரம், தையல் உபகரணங்கள், தைக்கப்பட்ட உடைகள் போன்ற கண்காட்சிப் பொருட்களை சோ.தங்கன், பொன்.நித்தியானந்தம், சின்னத்தம்பி, தமிழினி, பூவிழி மற்றும் பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள் என பலரும் பார்வையிட்

அதைத் தொடர்ந்து [illegible] ழ்வு சிறப்பாக அமைக்கப்பட்ட மேடையில் இடம் பெற்றது. தலைமையுரையினைத் தொடர்ந்து வரவேற்புரையினைப் பயிற்சி பெற்று வெளியேறும் மாணவி க.கமலாம்பிகை பாடல்வரிகள் ஊடாக நிகழ்த்தினார். அடுத்து சிறப்புரையினை கரைச்சி பிரதேச செயலர் பொன் நித்தியானந்தம் நிகழ்த்தினார். இதில் பெண்களுடைய இப்படியான திறமை வாய்ந்த தொழிற்பயிற்சி மென்மேலும் வளர்ச்சியடைந்து, பெண்கள் சமுதாயத்தில் சரிநிகராக திகழ வேண்டும் என வாழ்த்தினார். அதைத் தொடர்ந்து மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி, முறைசாராக் கல்வி உதவிப் பணிப்பாளர் சின்னத்தம்பி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.



தொடர்ந்து பயிற்சி பெற்று வெளியேறும் மாணவிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றதுடன் கலை நிகழ்வுகள் நடந்தேறின. தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் இப்பயிற்சிக்கான ஆதரவினை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (கு)


# கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம்


## -: ஏழாம் நாள் :-


### விழிப்புணர்வு வார ஆர்வலர்கள்



தலைவர்
வெண்புறா நிறுவனம்


திட்ட அதிகாரி
யுனிசெவ்


பாதுகாப்பு அலுவலர்
யுனிசெவ்



பணிப்பாளர்
தமிழர் புனர்வாழ்வுக்கழகம்



கிளிநொச்சி


தொடர்பகப் பணியாளர்கள்


முல்லைத்தீவு

**கண்ணிவெடி விழிப்புணர்வு வார நிகழ்வுகளை வெற்றிகரமாக நடாத்தி முடிப்பதற்குச் சகல வழிகளிலும் எம்முடன் ஒத்துழைத்த அனைத்து ஆர்வலர்களையும் வெண்புறா நிறுவனம் நன்றியுடன் நினைவு கூருவதில் பெருமிதமடைகின்றது. அந்த வகையில்...**


கனகராயன் குளம்


பளை

- ஆக்கத்திற்கும் ஊக்கத்திற்கும் அனுசரணை வழங்கிய தமிழர் புனர்வாழ்வுக் கழகம்.
- போதிய நிதியுதவி வழங்கியதுடன் கற்றல் உபகரணங்களையும் காலமறிந்து உதவிகள் பலவும் செய்து வரும் யுனிசெவ் நிறுவனம்.
- வாகன, ஒலிபெருக்கி வசதிகள் அமைத்துதவிய தமிழர் புனர்வாழ்வுக் கழக மற்றும் அரசியல்துறை மாவட்டப்பணிமனைகள்.
- நிகழ்வுகளின் விளம்பரத்திற்குத் தேவையான பதாகைகள் வாகனக் கொடிகள், ஒட்டிகள் முதலியவற்றினை உரிய நேரத்தில் சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய உயிரோடைப் பதிப்பகத்தினர்.
- நிகழ்வுகளின் விளம்பரங்களை தங்கள் ஊர்திகளில் காட்சிப்படுத்தி விழிப்புணர்வூட்டிய தமிழீழப் போக்கு வரவுக் கழகம், தனியார் போக்குவரத்து சேவை, வாகன உரிமையாளர்கள், பொது அமைப்புக்கள், உள்நாட்டு வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள்.
- விழிப்புணர்வு வீதி நாடகங்களை மேடையேற்றிவரும் மகளிர் கலைபண் பாட்டுக் கழகத்தினரின் விடுதலைக் கலைஞர்கள்.
- விழிப்புணர்வுச் செய்திகளை கால நேரப்படி சிறந்த முறையில் பிரசுரம் செய்த ஈழநாதம், உதயன் பத்திரிகைகள்.
- எமது செய்திகளையும், தரவுகளையும் தொகுத்து ஒலிபரப்பி உதவிய புலிகளின் குரல் வானொலி.
- வாகனங்களையும் பணியாளர்களையும் வழங்கி விழிப்புணர்வுக் கல்வியினைப் பாடசாலைகளிலும், கிராமங்களிலும் நடாத்துவதற்கு உதவிய **MAG** நிறுவனம்.
- அடிக்கடி எம்முடன் தொடர்பு கொண்டு விழிப்புணர்வுச் செய்திகளைத் தேசிய மற்றும் வெளிநாட்டு ஊடகங்களில் வெளியீடு செய்த ஊடகவியலாளர்கள்.
- இரவு, பகல் பாராது தொடர்ந்து எல்லாப் பணிகளையும் சரிவரச் செய்து இந்நிகழ்வினை மேம்பட உதவிய எமது தொடர்பகப் பணியாளர் ஆகியோர் அனைவரையும் மீண்டும் நினைவு கூர்ந்து வாழ்த்தி நிற்கும்.


~ வெண்புறா நிறுவனம் வன்னி


நெடுங்கேணி


தாளையடி



பூநகரி


ஆண்டாங்குளம்



மாங்குளம்


பனங்காமம்

(சி-9867)



## தமிழீழப் போக்குவரவுக் கழகப் பயணியர் பேருந்துப்பணி



### புதுக்குடியிருப்பு – மந்துவில் – முல்லைத்தீவு

மேற்படி பேருந்துப்பணி 28.06.2004 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கிற்கு நடைபெறும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**நேர ஒழுங்கு :-**

**புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு**

| புதுக்குடியிருப்பு | முள்ளிவாய்க்கால் | முல்லைத்தீவு |
|---|---|---|
| காலை 10.00 | 10.35 | 10.45 |

**முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு**

| முல்லைத்தீவு | முள்ளிவாய்க்கால் | புதுக்குடியிருப்பு |
|---|---|---|
| மாலை 03.00 | 03.10 | 03.45 |

முகாமையாளர்,
தமிழீழப்போக்குவரவுக் கழகம்,
பேருந்துப்பகுதி, கிளிநொச்சி.

(சி-9742)



## தமிழீழப் போக்குவரவுக் கழகப் பயணியர் பேருந்துப்பணி



### கிளிநொச்சி – புதுக்குடியிருப்பு

அரச பணியாளர்களின் நலன் கருதியும் மக்களது வேண்டுகைக்கு அமைவாகவும் 28.06.2004 ஆம் நாளிலிருந்து மேற்படி பேருந்துப்பணி பின்வரும் நேர ஒழுங்கிற்கு நடைபெறும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**நேர ஒழுங்கு :-**

**கிளிநொச்சி - புதுக்குடியிருப்பு**

| கிளிநொச்சி | பரந்தன் | புளியம்பொக்கணை | விசுவமடு | உடையார்கட்டு | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|---|---|
| காலை06.45 | 07.00 | 07.30 | 07.45 | 08.10 | 08.30 |

**புதுக்குடியிருப்பு - கிளிநொச்சி**

| புதுக்குடியிருப்பு | உடையார்கட்டு | விசுவமடு | புளியம்பொக்கணை | பரந்தன் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| மாலை 05.30 | 05.50 | 06.15 | 06.30 | 07.00 | 07.15 |

முகாமையாளர்,
தமிழீழப்போக்குவரவுக் கழகம்,
பேருந்துப்பகுதி, கிளிநொச்சி.

(சி-9741)

# சேரன் சுவையகம்

சேரன்

28.06.2004 ஆம் நாளிலிருந்து சேரன் சுவையகம் கூடுதல் வசதிகளுடன் மீள் ஒழுங்குபடுத்தப் பட்டுத் தனது சேவையைத் தொடர்கின்றது என்பதனை அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

## இங்கு

- ★ வெளி விற்பனைப்பகுதி (TAKE AWAY COUNTER)
  - O குளிர்களி (ICE CREAM)
  - O பழச்சாறுகள் (FRESH FRUIT CRUSH)
  - O வெதுப்பக உற்பத்திகள் (BAKE HOUSE PRODUCTS)
- ★ மேலும் பல புதிய பல்வேறுபட்ட சுவைகளில் பன்னாட்டு உணவுகள் பரிமாறும் பகுதி (NEW VARITIES OF FOREGIN AND LOCAL FOODS)
- ★ அமைதியான குளிரூட்டப்பட்ட மதுபானப்பகுதி (NICE AND AIR CONDITIONED BAR)
- ★ வாகனத்தரிப்பிட வசதி (PARKING FACILITIES)

போன்ற சிறப்பு வசதிகளுடன் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

முகவரி :- கண்டிச்சாலை,
கிளிநொச்சி.

தொலைபேசி எண் :>> 021-2285765<< Telephone No.

Address:- Kandy Road,
kilinochchi.

(சி-9868)

# பிரான்சின் அதிர்ச்சித் தோல்வியானது அணியில் பல மாற்றங்களுக்கு வித்திடும்

## விளையாட்டு விற்பன்னர்கள்




ஒரேயொரு கோலின் காரணமாக கால்பந்தாட்ட உலகை அதிர்ச்சிக்கு உள்ளாக்கிய பிரான்சின் தோல்வி காரணமாக பிரான்ஸ் அணி முழுமையான மாற்றத்திற்கு உட்படும் என விளையாட்டு ஆய்வாளார்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக கால்பந்தாட்ட விற்பன்னர்கள் இப்போது இருக்கும் பிரான்ஸ் அணிவீரர்களின் சராசரி வயது 30 இற்குமேலாக இருப்பதாகவும் இதன் காரணமாக இளம் வீர்களுக்கு வாய்ப்பு கொடுப்பதற்காக வயது முதிர்ந்த பல வீரர்கள் அணியில் இருந்து நீக்கப்படுவார்கள் எனவும் தெரிவித்துள்ளனர்.

அதில் சிடானுக்கு இப்போது 32 வயதாக இருந்தாலும் சிறப்பாக விளையாடி வந்த வீரர் அவர் இந்த தொடர்போட்டியில் மூன்று கோல்களை அடித்தவர் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் மிகவும் களைப்படைந்த வீரராகக் காணப்பட்டார். அதுபோல ஐரோப்பிய நாடுகளில் மிகச்சிறந்த வீராகக் கருதப்படும் ரியரிஹென்றி காலிறுதிப் போட்டியில் மிக பல வீனமாக விளையாடியதையும் எடுத்துக்காட்டியுள்ளனர்.இந்நிலையில் கிரீஸ் அணி ஒற்றுமை தான் வெற்றிக்கு மிக முக்கியமான காரணம் என்று வெளிப்படையாக கூறியுள்ளது.




கிரீசின் ஏஞ்சலோஸ் எரிஸ்ரி தமது அணிக்கான வெற்றிக்கோலைப் போடும் காட்சி

### யூரோ கிண்ண கால்பந்து, மற்றுமொரு காலிறுதிப் போட்டி

# பிரான்ஸ் அணிக்கு அதிர்ச்சித் தோல்வி

# கிரீஸ் அணிக்கு வரலாற்று வெற்றி



நடப்பு ஐரோப்பிய சம்பியனான பிரான்ஸ் அணி லிஸ்பனில் நடை பெற்ற யூரோ கிண்ண இரண்டாவது



காலிறுதிப் போட்டியில் கிரேக்கத் திடம் (கிரீஸ்)1-0 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்து போட்டிகளில் இருந்து வெளியேறியது.

ஐரோப்பிய சம்பியன் கிண்ண கால்பந்தாட்டப் போட்டி வர லாற்றில இந்தப் போட்டி முடிவு மிகவும் எதிர்பாராத முடிவாக அமைந் துள்ளது என்று சர்வதேச கால்பந்தாட்ட



விற்பன்னர்கள் கூறுகின்றனர்.

யூரோ கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளில் கிரேக்க அணி பெரிதாக சாதிக்கப்போவதில்லை என அனுமானிக்கப்பட்டிருந்தது.

எனினும் பிரான்ஸ் அணிக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதிப்போட்டியில் 65ஆவது நிமிடத்தில் போடப்பட்ட ஒரேயொரு கோலின் மூலம் கிரேக்க அணி எதிர்பாராத வெற்றியை ஈட்டி அரையிறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றதுடன் வரலாற்றில் முதற் தடவையாக அரையிறுதிக்கான வாய்ப்பையும் பெற்றது.

பிரான்ஸ் கோல் எல்லையில் வைத்து எவ்வித சவாலையும் எதிர்கொள்ளாது உயரே தாவிய ஏஞ்சலோஸ் எரிஸ்ரி மிகவும் அபாரமாகப் பந்தைத் தனது தலை



யால் முட்டி கிரேக்கத்துக்கான வெற்றிக்கோலைப் போட்டார்.

இதன் பின்னர் பிரான்ஸ் அணி சம்பியன்பட்டத்தைத் தக்கவைத் துக்கொள்ளக் கடும் முயற்சி எடுத்த



போதும் அதன் கோல் போடும் முயற்சி கைநழுவிப்போனது.

இப் போட்டி முடிவை அடுத்து செக்குடியரசு அல்லது நெதர் லாந்து அணியை எதிர்த்து அரையிறுதிப் போட்டியில் கிரேக்க அணி எதிர்கொள்ளவுள்ளது.

### விம்பிள்டன் டென்னிஸ் போட்டி

# ஹெவிட், அன்டிரொடிக்கு, ளோரியன்மேயர் அடுத்த சுற்றுக்கு குரோஷியாவின் இவானிசேவிச் விடைபெற்றார்



விம்பிள்டன் டெனிஸ் போட்டிகளில் அவுஸ்தி ரேலியாவின் லெவிட்டன் ஹெவிட் முன்னாள் சம்பியனான குரோஷியாவின் இவானி சேவிச்சை மூன்றாவது சுற்றுப் போட்டியில் நேர் செட்களில் வீழ்த்தி நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

இப்போட்டியுடன் ஓய்வு பெறப்போவதாக அறிவித்திருந்த இவானிசேவிச்சை உற்சாகப் படுத்தும் வகையில் ரசிகர்கள் ஆரவாரத்துடன் ஆட்டத்தைக் கண்டு களித்தனர்.அன்டி ரோடிக் அவுஸ்தி ரேலியாவின் அலெக்சாண்டர் பேயாவை 6-3,7-6,6-4 என்ற செட்களில தோற்கடித்தார் தரவரிசைப்பட்டியலில் மூன்றாவது இடத்திலுள்ள ஆர் ஜன்டினாவின் கின்மோ கொரியா, ஜேர்மனியின் குளோரியன் மேய ரிடம் அதிர்ச்சித்தோல்வி அடைந்தார்.மகளிர் பிரிவு போட்டியில் தற்போதைய சாம்பியன் செரினா வில்லியம் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

# முரளிதரன்-வெகுவிரைவில் மற்றுமொரு துஸ்ராவை வீசலாம்

-ஷேன் வோர்ன்

முரளிதரன் மற்றுமொரு துஸ்ரா பந்தை வெகு விரைவில் வீசலாம் என்று கருத்துத் தெரிவித்துள்ளார் அவுஸ்திரேலியாவின் சுழற்பந்து வீச்சாளரும் முரளிதரனின் உலகசாதனையைக் குறிவைத்துப் பந்துவீசத் தயாராகும் ஷேன் வோர்ன் குறிப்பாக அவுஸ்திரேலியா வரமாட்டேன் என்று அறிவித்துள்ள முரளி கடைசி நேரத்தில் தனது முடிவை மாற்றி அவுஸ்திரேலியா வந்தால் அது அவரது புதிய துஸ்ரா பந்துவீச்சாக இருக்கும் எனத் தான் நம்புவதாகத் தெரிவித் துள்ளார்.முரளிதரன் வரவேண்டும் என்பதே எனது அடிப்படையான விருப்பமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.



பிரான்ஸ் ரசிகர் துக்கத்தில் இருப்பதையும் கிரீஸ் வீரர்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதையும் படங்களில் காணலாம்.

### -அவுஸ்திரேலியாவுக்கான சிறிலங்கா சுற்றுலா-

# அவுஸ்.முதலமைச்சர் அணியுடனான பயிற்சிப் போட்டி; சங்கக்காரவின் அபார துடுப்பாட்டம் சிறீ.வெற்றிநோக்கி

அவுஸ்திரேலிய முதலமைச்சர் அணியுடனான நான்கு நாள் பயிற்சிப் போட்டியில் விளையாடிவரும் சிறிலங்கா அணி குமார்சங்கக்காரவின் சிறப்பான துடுப்பாட்டத்தால் வெற்றி பெறும் நிலையில் உள்ளது.187 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் சிறிலங்கா அணி ஒரு விக்கெட்டை இழந்து ஆறு ஓட்டங்களைப் பெற்றுள்ளது.இதில் சங்கக்காரவின் சிறப் பான துடுப்பாட்டம் சிறிலங்காவை வெற்றியின் பாதையில் அழைத்து சென்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியாவின் வடமத்திய மாகாண முதலமைச்சர் அணி 416 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மிகச்சிறப்பாக ஆடிய லஸ்சின் லாங்கர் 151 ஓட்டத்தைப் பெற்றார். பதிலளித்த சிறிலங்கா அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 378 ஓட்டங்களைப்பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இதில் சங்கக்கார ஆட்டமிழக்காது 203 ஓட்டங்களைப்பெற்றார். சனத் ஜெயசூரிய 64 ஓட்டங்களை பெற்றார். பதிலுக்கு தனது இரண்டாவது இனிங்ஸை ஆடிய முதலமைச்சர் அணி 178 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுக்களை இழந்து தமது இனிங்ஸைஇடைநிறுத்தியது.இடதுகை சுழற்பந்து வீச்சாளர் ரங்கனஹேரத் 45 ஓட்டங்களுக்கு 4.விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.மூன்றாம் நாளின் கடைசிப் பந்துவீச்சில் ஜெயசூரிய ஆட்டமிழந்தார். அந்த விக்கெட்டை மெக்ராத் கைப்பற்றினார். இன்று போட்டியின் இறுதி நாளாகும்.



ரிம் கெனின் ஒலிம்பிக் தீபத்தை டென்னிஸ் வீரர் ஏந்திச் செல்கிறார்.

விளையாட்டு

### - வடக்கு -கிழக்கு மாகாண கால்பந்து சுற்றுப்போட்டி

# முல்லைத்தீவு, அம்பாறை அணிகளை வீழ்த்தி யாழ்ப்பாணம் ,வவுனியா அணிகள் வெற்றி

(மன்னார்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தி லுள்ள எட்டு மாவட்டங்களின் உதை பந்தாட்ட சுற்றுப் போட்டி நேற்றுக் காலை 9.00 மணிக்கு மன்னார் பொது விளையாட்டு மைதானத் தில் ஆரம்பமாகியது.

இப்போட்டியில் திருகோண மலை, அம்பாறை, மட்டக்களப்பு, முல் லைத்தீவு , கிளிநொச்சி, யாழ்ப்பா ணம், மன்னார், வவுனியா ஆகிய எட்டு மாவட்டங்களும் கலந்து கொள்கின்றன.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் விஸ்வலிங்கம் அவர்கள் வீரர் களை அறிமுகம் செய்து போட்டி யினை ஆரம்பித்து வைத்தார் இந் நிகழ்வில் வன்னிமாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் விநோதரலிங்கம் வடக்கு-கிழக்கு விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் பிரதேச செயலா ளர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


இப்போட்டியில் முதலாவது போட்டியாக வவுனியா- முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த உதை பந்தாட்ட அணிகளுக்கிடையிலான போட்டி நடைபெற்றது.

இதில் வவுனியா மாவட்டம் முல்லைத்தீவை 4-3 என்ற கோல்க ணக்கில் வெற்றி பெற்றது. இதில் தவராசா ,குகணேசன் தலா ஒவ்வொரு கோல்களையும், சதீஸ் 2 கோல்களை யும் போட்டனர். இதன்பின்னர் யாழ்ப் பாண மாவட்டமும் அம்பாறை மாவட் டமும் மோதின இதில் யாழ்ப்பாண மாவட்ட அணி 5-0 என்ற கோல்களி னால் அம்பாறை அணியை வெற்றி கொண்டது.

யாழ். அணிசார்பாக யேசுதாசன் 4 கோல்களையும், வினோ ஒரு கோலையும் போட்டனர். மாலை நடை பெற்ற மட்டக்களப்பு, மன்னார் அணி களுக் கிடையிலான போட்டியில் மட் டக்களப்பு அணி வெற்றிபெற்றது. திருமலை முல்லைத்தீவு அணிகளுக் கிடையிலான மற்றுமொரு போட்டி யில் திருமலை அணி 2-0 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றிபெற் றது. இரண்டு கோல்களையும் நோயல் போட்டார். மேற்படி போட்டி தொடர்ந்து இன்றும்நடைபெறும்.

(மி)

## சிந்தனைக்கு



விடுதலை வீரனின் சுயநலமற்ற பற்றற்ற வாழ்க்கை உன்னதமானது; அர்த்தமானது சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான்.

தமிழீழத்தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 27-06-2004

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com
natham 23ela@yahoo. com


## சொல்லிவிட்டா செய்கின்றனர்!

“கருணாவிற்கு இராணுவத்தினர் உதவினர் என்பதற்கு எந்த வித ஆதாரத்தையும் நாம் காணவில்லை எனப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளமையானது சமாதானத்தின் எதிர்காலத்தில் இதில் கண்காணிப்புக் குழுவின் பங்கு பணிபற்றிய சில தவிர்க்க முடியாத கேள்விகளை எழவைப்பதாகவே உள்ளது.

கருணா மட்டக்களப்பில் இருந்து தப்பிச் செல்வதற்கு பாராளுமன்ற உறுப்பினரான அலிசாஹிர் மௌலானா உதவியுள்ளார் என்பது வெளிப்பட்ட நிலையிலும், கருணாவிற்குச் சில இராணுவ அதிகாரிகள் உதவி இருக்கலாம் என ஒரு சிரேஷ்ட அமைச்சர் தெரிவித்த நிலையிலும், அமைச்சர் ஒருவர் கருணாவுடன் தொலைபேசியில் தொடர்புகளை வைத்துக்கொண்டிருப்பதாக ‘ஒப்புதல்’வாக்கு மூலங்களை அளித்துள்ள நிலையிலும் இராணுவத்தினர் கருணாவிற்கு உதவியதற்கானஆதாரம்எதையும் நாம் காணவில்லை என கண்காணிப்புக் குழுகூறியிருப்பதானது இவர்கள் கருணா விவகாரத்தில் இருந்து விலகியிருப்பதை விரும்புகின்றனரோ என்ற ஐயத்தையே தோற்றுவிப்பதாகிறது.

கருணாவிற்கு இராணுவம் ஆயுதரீதியில் பாதுகாப்பு வழங்குவதையோ அன்றி பாதுகாப்புடன் அழைத்துச்சென்றதையோ நிரூபிப்பதற்குத் தேவையான ஆதாரங்களைத் திரட்டுவதென்பது இலகுவில் சாத்தியமானதல்ல. அவ்வாறு இல்லாவிடில் கருணா தான் தப்பி ஓடப்போவதையோ அன்றி இராணுவம் கருணாவிற்கு பாதுகாப்பு அளித்துக் கூட்டிச்செல்லப்போவதையோ அல்லது கருணா தங்கவைக்கப்பட்டுள்ள இடத்தையோ அவர்கள் புலிகளுக்கு முன்னறிவித்தாலே அது சாத்தியமானதாக முடியும் அல்லாவிடில் கருணாவைத்தேட புலிகளைஇலங்கை பூராவும் அனுமதித்தல் வேண்டும்.

ஆனால் தற்பொழுதும் கருணா கொழும்பிலேயே தங்கியுள்ளார் என்பதற்கும் அவர் சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்புடன் தொடர்புகளைக் கொண்டுள்ளார் என்பதற்கும் ஆதாரங்கள் இல்லையாயினும் நிராகரிக்க முடியாத அளவிற்கு இவை தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன. பாதுகாப்புச் செயலாளர் சிறில் ஹேரத்கூறுவது போன்று கருணா உள்நாட்டில் உள்ளாரா? வெளிநாட்டில் உள்ளாரா? தொலைபேசித் தொடர்புகளைக் கொண்டு கண்டறியமுடியாது என்பது சிறுபிள்ளைத்தனமானது. தொலைபேசி இலக்கங்களைக்கொண்டே இவை உள்நாடா?வெளிநாடா? என்பதைக் கண்டறிந்து விடமுடியும்.

அத்தோடு கருணாவுடன் தொடர்புடைய எந்தத்தரப்பும் சரி சிறிலங்கா அரசதரப்பும் சரி கருணா கொழும்பில் இல்லைஎன்றோ அன்றிக் கொழும்பை விட்டு வெளியேறிவிட்டார் என்றோ இதுவரை அறிவிப்பு எதையும் விடவும் இல்லை. ஆகையினால் கருணா கொழும்பில் தான் உள்ளார் என்பதையாரும் ஏற்க மறுத்தால் அவர்கள் நிஜத்தைக் கண்டுகொள்ள மறுப்பவர்களாகவே இருக்க முடியும்.

இந்நிலையில் தற்போது எழும் கேள்வியானது கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கருணாதரப்பு என்ற ரீதியில் புலிகளுக்கெதிராகவும், தமிழ்மக்களுக்கெதிராகவும் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் வன்முறைகள் யுத்தநிறுத்த மீறலாக மாட்டாதா? என்பதே ஆகும்.

அதாவது, கொழும்பில் இருந்து கொண்டு கிழக்கில் அவரது பெயரில் தாக்குதல் நடத்தப்படுமானால் அது யுத்த நிறுத்த மீறல் ஆகாதா? என்பதே ஆகும். ஏனெனில் கொழும்பிலோ அன்றி இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியிலோ வாழ்பவர்கள் யாராயினும் அவர்கள் இராணுவத்தின் பாதுகாப்பிலேயே உள்ளனர் என்பதே அர்த்தமாகும் அத்தோடு இராணுவத்தினரின் ஒத்துழைப்பின்றி அவர்களினால் எதனையும் மேற்கொண்டுவிடமுடியாது.

இதனை மறுவளமாகப் பார்ப்பதானால் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்துகொண்டு கொழும்பிலோ அன்றி தென்னிலங்கையின் வேறொரு பகுதியிலோ ஒரு குழு தாக்குதல் நடத்தினால் இதுகுறித்துப் புலிகள் விமர்சிக்கப்படமாட்டார்களா? விடுதலைப்புலிகள் இதற்குப் பொறுப்போ உத்தரவாதமோ அளிக்க வேண்டிய தேவை எழமாட்டாதா?

ஏனெனில் தற்பொழுது கருணாவின் செயற்பாட்டிற்கு அரசாங்கம் வழங்கும் பாதுகாப்பும் அத்தகையதே ஆகும். கருணாவிற்கு சிறிலங்கா அரசாங்கம் அளிக்கும் பாதுகாப்பானது கிழக்கின் ஸ்திர நிலையைக் குலைக்கும் வகையிலானதே இந்நிலையானது யுத்த நிறுத்தத்திற்கும் புரிந்துணர்வு உடன்பாட்டிற்கும் மாறானதாக இல்லாது விடில் அமைதி என்பதும் யுத்தநிறுத்தமென்பதும் எத்தனைகாலத்திற்குநீடிக்கும் என்பது கேள்விக்குரியதாகமாறிவிடும்.

# ம.வி.மு–சிறில.சுதந்திரக்கட்சி இணைந்து பாராளு. நடவடிக்கைகளைக் குழப்ப முயற்சி

### ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு

மக்கள் விடுதலை முன்னணி சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து பாராளுமன்ற நடவடிக்கைகளை குழப்பும் செயலில் ஈடுபட்டுள்ள தெனஎதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம்சாட்டி யுள்ளார்.

இவ்வாறான செயற்படுகளை சனநாயகசமூகம் ஏற்றுக் கொள்ளாதென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மாகாணசபைத்தேர்தலில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிடுகின்ற ஐ.தே.கட்சி வேட்பாளர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் கலந்து கொண்டு உரை யாற்றிய வேளை அவர் இதனைத் தெரி வித்துள்ளார். தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில;மக்கள் விடுதலை முன்னணியும் சனநாயக விரோத சக்திகள் பலவும் 80ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கு தடையை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் ஈடு பட்டதாக அவர் தெரி வித்துள்ளார். இவ்வாறான சந்தர்ப்பத்தின் போது அப்போதைய எதிர்க்கட்சியின் தலைவராக இருந்த சிறிமா ஐ.தே.கட்சியுடன் இணைந்து சனநாயகத்தைப் பாதுகாக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கொழும்பின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலில்லை மேலதிக ஏற்பாடுகள் தேவையில்லை

### சிறில பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

கொழும்பின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படவில்லை என பாதுகாப்பு அமைச்சின் செயலர் சிறில் ஹேரத் தெரிவித்துள்ளார், நகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் உரிய முறையில் செய்யப்பட்டுள் ளன.எனவே மேலதிக பாதுகாப்புக்கான அவசியம் இல்லை. அவசர நேரங்களில் காவல் துறையினருக்கு எந்த நேரமும் உதவ படையினர் தயார் நிலையிலேயே வைக்கப் பட்டுள்ளனர்.

படைத்தரப்பை பொறுத் தவரையில் தற்சமயம் நகரில் மேலதிகமாகக் காணப்படும் சோதனை தடைகளையும் அகற்றும் நோக்கம் இருக்கிறது இதனால் நகரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என நான் நம்பவில்லை என மேலும் அவர் தெரிவித்தார்.அண்மையில் கிராண்ட்பாஸ் பகுதியில் தற்கொலை அங்கி கண்டு பிடிக்கப்பட்டமையை அடுத்து கொழும்பு நகரின் பாதுகாப்பைப் பலப்படுத்த பாதுகாப்பு சபை நடவடிக்கை எடுத்திருந்தது. எனினும் அமைச்சரவை பேச்சாளர் மங்கள சமரவீர கொழும்பில் கண்டெடுக்கப்பட்ட தற்கொலை அங்கிக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் தொடர்பில்லை என தெரிவித்திருந்தமை இங்குகுறிப் பிடத்தக்கது. (32)

# 4 இலட்சத்து 31 ஆயிரம் சிறுவர்கள் இலங்கையில் கல்வியை இடைநிறுத்தினர்

இலங்கையில் தேசிய மட்டத்தில் 5 வயதுக்கும் 14 வயதுக்குமிடைப்பட்ட 4இலட்சத்து 31 ஆயிரத்து 668 சிறுவர்கள் பாடசாலைகளைஇடைநடுவில் கைவிட்டுள்ளனர்.இவ்வாறு மிக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட புள்ளி விபரத் தகவல்கள் கூறியுள்ளன.

இத்தொகையானது நாட்டிலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலுகின்ற மாணவர்களில் 10 சதவீதம் எனவும், வடக்கு-கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த மட்டில். 5 வயதுக்கும் 17 வயதுக்கும் இடைப்பட்ட நிலையில் சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் சிறுவர்கள் பாடசாலைக் கல்விக்கு முழுக்குப் போட்டுள்ளனர் எனவும் அறியப் பட்டுள்ளது.

# ஜே.வி.பி.பா.உ.வின் செயலுக்கு நியாயம் கற்பிக்கிறார் அமைச்சர்

ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் பிறேமசிறி மனகே ராகுலகல்லூரியில் இருந்து தனது மகனைமாற்றியுள்ளார் என ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டார்.

இப்பாராளுமன்ற உறுப்பினரின்மகன்தேசியப்பாடசாலையில் இணைவதற்குப் போதிய புள்ளிகள்பெற்றிருக்கவில்லை. ஆனால் தனதுஅரசியற் செல்வாக்கைப் பயன்படுத்தி ராகுல கல்லூரியில் மகனைச் சேர்த்தார். பாடசாலை அதிகாரிகளின் அழுத்தத்தைத் தொடர்ந்து மகனை இப் பாடசாலையில் இருந்து இப் பாராளுமன்ற உறுப்பினர் மாற்றியுள்ளார். பாராளுமன்ற உறுப்பினருக்கு முன்னணிப் பாடசாலையில் தமது பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு உரிமை இருந்துங்கூட, ஊடகங்களின் மிகைப்படுத்திய பிரச்சாரத்தினால் அவர் மீண்டும் தனது மகனை மாற்றியுள்ளதாக அமைச்சர் மங்கள சமரவீரகுறிப்பிட்டார்.

## ஹெலஉறுமயவிற்குள் மாற்று மதத்தவர்

ஜாதிக ஹெல உறுமயக் கட்சிக்குள் மாற்று மதத்தவரின் செல்வாக்கு அதிகரித்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஜாதிக ஹெல உறுமய கட்சிக்குள் மாற்று கொள்கையை கொண்டுள்ள அப்பராகே பண்ணானந்த தேரர் இந்தக்குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார். கத்துலுவே ரத்ன சீலதேரர் அக்மீமன தயாரத்ன தேரருக்கு எதிராக தாக்கல் செய்துள்ள நீதிமன்ற மனு தொடர்பில் தயாரத்ன தேரர்சார்பில் நீதிமன்றத்தில் பிரசன்னமான நான்கு சட்டத்தரணிகளும் பௌத்தர்கள் இல்லை என அப்பராகே பண்ணானந்த தேரர் தமது வாதத்துக்குச்சான்றாகத் தெரிவித்துள்ளார். (32)

## வாகனக்கொள்ளைகள் அதிகரிப்பு

சிறிலங்காவில் வாகன கொள்ளை சம்பவங்கள் அதிகரித்து செல்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த6 மாதக்காலப்பகுதியில் அங்கு 298 வாகனங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன. இதன் போது 25 பேர்வரைகொல் லப்பட்டுள்ளனர் 21 சொகுசு வாகனங்கள், 80 வான்கள், 98 முச்சக்கர வண்டிகள், 13 பார ஊர்திகள், 81 உந்துருளிகள் மற்றும் ஒரு பேருந்து என்பனவே கொள்ளையிடப்பட்ட வாகனங்களாகும், இதேவேளை பெருமளவான வாகனங்கள் சிலாபம் பகுதியிலேயே கொள்ளையிடப்பட்டுள்ளன. இந்த கொள்ளைகளில் சமூகத்தின் பல்வேறு தரப்பினரும் ஈடுபட்டு வருவதாக தகவல்கள்வெளியாகியுள்ளன. (32)

# பொ.ஐ.மு வேட்பாளரை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு

பொதுசன ஐக்கிய முன்னணியின் ஊவா மாகாணசபை வேட்பாளர் விஜய முனி சோய் ஷாவை கண்ட இடத்தில் கைது செய்யுமாறு வெல்லவாய நீதவான் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வியாழன் இரவு இவரின் மாகாணசபைத் தேர்தல் தொடர்பான சுவரொட்டிகளை ஊவா மாகாணப்பொலிசார் கைப்பற்றினர்.இதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட வேட்பாளர் நேற்று முன்தினம் மெதகம பொலிஸ் நிலையத்திற்குச் சென்று பொலிஸ் பொறுப்பதிகாரியை அச்சுறுத்தி யுள்ளார். இதன்போது பொலிஸ் நிலையத்தில் மாகாணசபைக்கான தபால்மூலவாக்கெடுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது இச் சம்பவங்களைப் பொலிசார் வெல்லவாய நீதிமன்றத்திடம் சமர்ப் பித்ததைத் தொடர்ந்து நீதவான் இவரைக் கைதுசெய்யுமாறு உத்தரவிட்டுள்ளார். (32)






## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

பண்ணை முறையில் இறால் வளர்ப்பது நாசகரமானது. இரசாயனங்கள், உரங்களின் மூலம் நீரை மாசடையச் செய்வதுடன் உலகின் கால்வாசிப்பங்கு கண்டற்காடுகளின் அழிவுக்கும் காரணமாக அமைகின்றது.

# வயதுகுறைந்தோரை இணைப்பதில்லை என்பதில் உறுதியுடன் இருக்கிறோம்

## 'யுனிசெவ்' அறிக்கை குறித்து கௌசல்யன்

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணையவருகின்ற 18 வயதிற்குக் குறைந்த சிறுவர்கள் யாரையும் சேர்த்துக் கொள்வதில்லை. என்பதில் நாங்கள் உறுதியுடன் இருக்கிறோமென மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்துள்ளார்.

விடுவிக்கப்பட்ட 30சிறுவர்கள் உட்பட 56சிறுவர்கள் மட்டு-அம்பாறை மாவட்டங்களில் அண்மையில் விடுதலைப்புலிகள் அமைப்பில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளதாக யுனிசெவ் அமைப்பு விடுத்துள்ள அறிக்கை தொடர்பாக பி.பி.ஸியினர் கேட்டவேளை, அவர் இதனைத் தெரிவித்துள்ளார். சுயவிருப்பில் சேர வருபவர்களை யுனிசெப் ஊடாகவும், நேரடியாகவும் அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைத்து வருகிறோம்.

கடந்த புதன்கிழமை இப்படி 06 சிறுவர்கள் ஒப்படைக்கப்பட்டனர். நாளை மேலும் மூன்று சிறுவர்கள் அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர் என மேலும் தெரிவித்தார்.

அத்துடன் எமது அமைப்பில் சிறுவர்கள் இருப்பதாக யுனிசெப் அமைப்பு கருதுமாயின் அதுபற்றிய விபரங்களைத் தந்தால் அது சம்பந்தமாக ஆராயப்படுமெனத் தெரிவித்தார்.

# இலங்கை அமைதிப் பேச்சுக்களில் இந்தியா உதவி புரிய வேண்டும்

## ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வை.கோ

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், அரசாங்கத்திற்குமிடையே மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அமைதி நடவடிக்கைக்கு இந்தியா உதவவேண்டுமென ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வை.கோ தெரிவித்துள்ளார்.

நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

மத்தியரசு அமைதி நடவடிக்கையில் சாதகமாகப் பங்காற்றுவதுடன், புலிகள் மீதான தடையை நீக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளார். ஆயினும் இதனை ம.தி.மு.க. கோரிக்கையாகமுன்வைக்கவில்லையெனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது

## சிங்கப்பூர் பிரதமரிடம் சனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

சிறுபான்மையினர்அனைவரதும் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க சகல தரப்பினரையும் இணைத்துக் கொள்ளும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் பிரதமரை நேற்று முன்தினம் சந்தித்தவேளை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்:-

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதும் பொருளாதாரத்தை மறுசீரமைப்பதும் இலங்கை முகம் கொடுத்துள்ள சவால்களென அவர் சுட்டிக் காட்டியுள்ளார். அத்துடன் சமாதான நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல சிங்கப்பூரின் உதவிக்கு மதிப்பளிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# குடல் நோய்களுக்கான சிகிச்சை இன்று ஆரம்பம்

(அலுவலகசெய்தியாளர்)

இன்று தொடக்கம் 07.07.2004 வரை புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் குடல் தொடர்பான நோய்களுக்கு நவீன கருவியின் உதவியுடன் சிகிச்சை வழங்கப்படவுள்ளது.

அமெரிக்காவில் இருந்து வருகை தந்திருக்கும் குடல் நோய்களுக்கான சிகிச்சை நிபுணர் திரு.மூர்த்தி அவர்களினால் வயிற்றுநோ, வயிற்றெரிவு, வயிற்றுக் குத்து மற்றும் குடல் சார்ந்த நோய்களுக்கு சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன. குறிப்பாக குடல் சார்ந்த நோய்களைக் கண்டறியக்கூடிய நவீன கருவியின் உதவியுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு சிகிச்சை வழங்கப்படும்.

காலை 8.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை இச் சிகிச்சை நடைபெறவுள்ளது. பயன்பெற விரும்புவோர் வெளிநோயாளர் பகுதியில் நேரில் தொடர்பு கொள்ளவும்.முன்னர் பதிவுகளை மேற்கொண்டவர்கள் 27;28ஆம் திகதிகளில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர். (தீ)

## வதிவிடப் பயிற்சி நெறி

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வதிவிடப் பயிற்சி நெறி எதிர்வரும் 30.06.2004 முதல் 04.07.2004வரைகிளிநொச்சி அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெறவுள்ளது.

மேற்குறிப்பிட்ட தினங்களில் தினமும் காலை 09.30 மணிக்கு மேற்படி பயிற்சிநெறி ஆரம்பமாகுமெனவும் கிளி/மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களை இப்பயிற்சி நெறியில் தவறாது கலந்து கொள்ளும் வண்ணமும் வேண்டப்பட்டுள்ளனர். (சோ)

## கொடிவாரம் ஆரம்பம்

(மன்னார்)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் 2004இற்கான வருடாந்த கொடி தினம் நேற்று முன்தினம் மன்னார் கச்சேரியில் ஆரம்பமாகியது. முதற் கொடியினை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் விஸ்வலிங்கம் அவர்களுக்கு மன்னார் மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் சமாதானத்தலைவர் அவர்கள் அணிவித்தார். இக் கொடிவாரம் இம் மாதம் 30ஆம் திகதி வரை நடைபெறும். (மி)

## அரச...

இந்தத் தீ விபத்தினால் மாகாண சபைத் தேர்தலில் எவ்வித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என அரசாங்க அச்சகர் நெவில் நாணயக்கார தெரிவித்தார். ஏனெனில் ஏற்கனவே தேர்தலுக்காக அச்சிடப்பட்ட வாக்கு சீட்டுக்கள் தேர்தல் பகுதிகளுக்குவிநியோகிக்கப்பட்டுவிட்டதாகவும் அவர் தெரிவித்தார். சேதத்தின் மொத்தப்பெறுமதி இன்னும் வெளியாகவில்லை (32)

## சமாதான...

மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி, தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் ஆகியோர்உட்படதேசியஎழுச்சிப் பேரவை உறுப்பினர்கள், போராளிகள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டிருந்த இந் நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய சோ.தங்கன்.

சிறிலங்கா அரசு தான் சமாதான முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாக ஒருப்புறம் சர்வதேச சமூகத்தினருக்குப் பாசாங்கு காட்டியவாறு மறுபுறம் ஆயுதங்களையும், யுத்தக்கப்பல்களையும் கொள்வனவு செய்து மீண்டும் ஒரு போரை ஆரம்பிப்பதற்கான தயார்ப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

இவ்வாறானதனது நடவடிக்கை மூலம் தற்போதைய யுத்த நிறுத்த சூழ்நிலையை அரசு துஷ்பிரயோகம் செய்கின்றமை புதிய அரசின் சமாதான முயற்சிகளில் எமக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் தமிழீழ தேசப்பற்றாளர்களைப்படுகொலை செய்வதன் மூலம் மீண்டும் ஓர் யுத்தத்தை எம் மீது வலிந்து திணிக்க அரசு திட்டமிட்டு வருகிறது எனவும் அவர் தெரிவித்தார். (33)

## பாக்...

தொடர்ந்து இருவருக்குமிடையேயான உறவுகள் அண்மையில் சீரில்லாமல் இருந்ததாகவும் இதனைத் தொடர்ந்து இவர் இராஜினாமாச் செய்துள்ளதாக இஸ்லாமாபாத்திலுள்ள பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

# யாழ்.பல்கலைப்பதிவாளர் பணியிலிருந்து இடைநிறுத்தம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் பணியிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் கடந்த 14-06-2004 மேற்கொண்ட வேலை நிறுத்தத்தின் போது முன்வைத்த கோரிக்கைக்கு இணங்க நேற்று நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழக பேரவை ஒன்று கூடலின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி யாழ்.பல்கலைக்கழக பதிவாளரை விசாரணை முடியும் வரை தற்காலிகமாக பணியிலிருந்து இடைநிறுத்தி வைப்பதென முடிவெடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு 24-06-2004 தொடக்கம் கல்விசாரா ஊழியர்கள் தற்காலிகமாகத் தமது போராட்டத்தை இடைநிறுத்தி வைத்தனர். இப்போராட்டம் தொடர்பாக இறுதியான முடிவு இன்றே வெளிவரவுள்ளது. (36)

# புதிய இராணுவத் தளபதியாக மேஜர்ஜெனரல் சாந்த கொட்டேகொட

## சனாதிபதி சந்திரிகா அங்கீகாரம்

இலங்கையின் புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொடவை நியமிப்பதற்கான அங்கீகாரத்தை சனாதிபதி நேற்றுமுன்தினம் வழங்கியுள்ளார். இராணுவத் தளபதியான லெப். ஜெனரல் லயனல் பலகல்ல எதிர்வரும் 30 ஆம் திகதியுடன் தமது பதவியில் இருந்து ஓய்வு பெறுகிறார். இதனையடுத்து ஏற்படும் வெற்றிடத்திற்கே சாந்த கொட்டேகொட நியமனம் பெறவுள்ளார். 1970 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி இராணுவத்தில் கனிஷ்ட நிலை அதிகாரியாக சேர்ந்து கொண்ட சாந்த கொட்டேகொட 1999ஆம் ஆண்டு மேஜர் ஜெனரலாக தரம் உயர்த்தப்பட்டார். தற்சமயம் இராணுவ தலைமையக அதிகாரியாக பதவி வகிக்கும் அவர், கிழக்கு மாகாண கூட்டு பொறுப்பதிகாரியாகவும் செயற்பட்டுவருகிறார். (32)

## - சிறிலங்கா கடற்படைத்தளபதி -

# அமெ.பாதுகாப்பு அதிகாரிகளுடன் பென்டகனில் சந்தித்துப் பேச்சு

கரேஜஸ் கப்பலைக் கொள்வனவு செய்வதற்கு அமெரிக்காவிற்குச் சென்றிருந்த கடற்படைத் தளபதி தயாசந்தகிரி நேற்று நாடு திரும்பியுள்ளார்.

இவர் அமெரிக்க கடற்படை துணைத்தளபதி மைக்முல்லனுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இதன்போது சட்டவிரோத ஆயுதக் கடத்தல், துறைமுகப் பாதுகாப்பு போன்றன ஆராயப்பட்டுள்ளன. இச்சந்திப்பு அமெரிக்கப்பாதுகாப்பு தலைமையகமான பென்டகனில் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் இருக்கின்ற கடற்படைத்தளபதி ஒருவர் பென்டகனில் சந்திப்பொன்றை நடத்தியமை இது முதற்தடவையாகும். இதனைவிடஇவர் ஆயுதக்கட்டுப்பாட்டுத்தளபதி ஜோன்வோல்ட்டனைச் சந்தித்துள்ளார். அத்துடன் அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் ஆகியோரையும் சந்தித்துள்ளார். (32)

# புதுக்குடியிருப்பில் வீதி விபத்தில் உந்துருளியில் வந்தவர் காயம்

புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் டிப்பர் ஒன்று மோட்டார் சைக்கிளில் மோதியதால் மோட்டார் சைக்கிளில் வந்தவர் படுகாயமடைந்தார். மோட்டார் சைக்கிள் பாரிய சேதத்துக்குள்ளாகியது. நேற்று மாலை பரந்தன் வீதியில் புதுக்குடியிருப்பை நோக்கி வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிளின் மீது பரந்தனை நோக்கிச் சென்றுகொண்டிருந்த டிப்பர் புதுக்குடியிருப்பு கைவேலிப் பகுதியில் மோதியது. இதனால் மோட்டார் சைக்கிளில் வந்த புதுக்குடியிருப்பு நாலாம் வட்டாரத்தைச் சேர்ந்த பரமசிங்கம் என்பவர் படுகாயமடைந்தார். அவர் அங்கிருந்து புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு உடன்மேலதிக சிகிச்சைக்காகயாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.நேற்றையதினம் மட்டும் நான்கிற்குமேற்பட்ட வீதிவிபத்துக்கள் இடம்பெற்றன. (08)

## வவு...

மாதம் பம்பைமடு பகுதியில் வளாகத்திற்குரிய கட்டுமானங்கள் ஆரம்பிக்கப்படும், மேலும் விடுதி, மைதானத்திற்கான வேலைத்திட்டங்கள் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படும், நிரந்தர விளையாட்டு உத்தியோகத்தர் நியமிக்கப்படுவார். விடுதிக் கட்டணம் 50 ரூபாவாகக் குறைக்கப்படும். வவுனியா பூங்கா வீதியில் உள்ள வளாக கட்டடத்தின் முதலாவது மாடி மாணவர்களுக்கு உடனடியாக வழங்கப்படுகின்றது. கீழ் மாடி இரண்டு மாதங்களுக்கு பின்னர் மாணவர்களுக்கு ஒப்படைக்கப்படும். இரண்டாம் மாடி கட்டிய பின்னர் கீழ் மாடியினை மாணவர்கள் நிர்வாகத்திடம் ஒப்படைக்கவேண்டும் என்பன போன்ற முடிவுகள் எட்டப்பட்டதையடுத்து மாணவர்கள் தமது பகிஷ்கரிப்பினைக் கைவிட்டுள்ளனா. (21)

## இறுதித்தீர்வு....

மென்பதை இச்சந்திப்பில் வலியுறுத்திய அமெரிக்கத் தூதுவர் இத்தகைய ஒரு இடைக்காலத் தீர்வு தொடர்பாகப் பேசவேண்டும் என்று விடுதலைப் புலிகள் கோருவதில் தவறேதும் இல்லை என்றும் தெரிவித்தார். அத்துடன் இருதரப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்குரிய ஒரு விடயமாக இருக்கும் விடுதலைப் புலிகளுடைய இடைக்கால யோசனை குறித்து இப்போது விமர்சிப்பது பொருத்தமல்ல எனவும் அவர் இச்சந்திப்பில் மேலும் வலியுறுத்தினார்.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்திற்குமிடையே மாதாந்தம் நடைபெற்று வருகின்ற சந்திப்பு இடைநிறுத்தப்படக் கூடாது அது தொடர்ந்து நடைபெறவேண்டுமென இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு தரப்பினரும் போரிற்கு விருப்பமில்லாமல் இருக்கின்ற வேளை சரியான பாதையை இவ்வாறான சந்திப்புத்தான் கொண்டு வருமென கூறியுள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியவேளையே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.(32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.